Registered No. M. 120.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

**LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION**

EDITORS:
M. S. PURNALINGAM PILLAI, B.A.
V. G. SURYANARAYANA SASTRI, B.A.

**Vol. V. No. 2.—September 1901.**

CONTENTS.

| | | |
|---|---|---|
| Agricultural Education | Editors | 41 |
| Ramayanam | T. T. Kanakasundaram Pillai, B.A. | 45 |
| The Culture of the Intellect | S. K. Sundaracharlu | 52 |
| A Black Scorpion | V. G. Suryanarayana Sastriar, B.A. | 58 |
| An Adaptation of Addison's Vision of Mirza | N. Balarama Aiyar | 59 |
| Kant's Conception of Space | K. S. Shanmukham Pillai. | 63 |
| Mahavellipore | C. Muttaiya Mudaliar | 69 |
| Tit Bits | C. D. Venkatavaradachariar | 72 |
| REVIEWS OF BOOKS | | 74 |
| EDITORIAL NOTES | | 78 |

*Madras:*
THOMPSON AND CO.,
33, POPHAM'S BROADWAY.

1901.

# JNANA BODHINI

**Terms of Subscription.**

**Annual Subscription including postage... 2 8 0**

**N.B.**—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

## TO ADVERTISERS.

**The Jnana Bodhini** affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி"ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாதாரர்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளையவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6. உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடகவியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கிலமொழிபெயர்ப்புடன் . | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல்நாள்) ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் . | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம் | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியாமகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற்பாகம்) ... | 0 | 10 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 14. வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16. திருமுல்லைவாயிற்புராணம் (கலிகோ, ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17. செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜ சரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை ஆரியன் புக் டேபோவிலும், தாம்ஸன் கம்பெனியாரிடத்திலும், அகப்படும்.

# ஞானபோதினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901௵ செப்டம்பர்மீ 20௳ { புத்தகம் 2.

### விஷயங்கள்.

| | |
|---|---|
| பயிர்த்தொழிற் கல்வி.— பத்திராதிபர் ... | 41 |
| இராமாயணம்.— தி. த. கனகசுந்தரம் பிள்ளை, பி. ஏ. ... | 45 |
| உள்ளப்பயிற்சி.— ச. கி. சுந்தராசாரியர் ... | 52 |
| ஒரு நண்டுத்தெறுக்கால்— வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பி. ஏ... | 58 |
| மீரீசி கண்ட பாவனைக்காட்சி.— ந. பலராம ஐயர் ... | 59 |
| இடவுணர்ச்சி.— வ. சு. சண்முகம்பிள்ளை ... | 63 |
| மகாபலிபுரம்.— செய்யூர்-முத்தைய முதலியார் ... | 69 |
| விநோதக் கூற்றுக்கள்.— க. தே. வேங்கடவரதாசாரியர் ... | 72 |
| புத்தகக் குறிப்புக்கள்.— ... | 74 |
| பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... | 78 |

பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
{ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1901.

வருஷ சந்தா ரூ. 2—8—0] [சஞ்சிகை ரூ. 0—4—0

ஞானபோதினி.

சம்புடம் V. } 1901வரு செப்டம்பர்மீ 20உ { புத்தகம் 2.

# AGRICULTURAL EDUCATION.

## பயிர்த்தொழிற் கல்வி.

வேளாண்மையிற் சிறந்ததோர் தொழிலில்லை யென்பது நம்மவர் யாவரும் அறிந்ததே. உழவு சிறப்புடைத்தெனக் கருதியே நமது திருவள்ளுவனாரும் தமது திருக்குறளின்கண் ஓரதிகாரத்தில் அதனைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். பிறரிடத்துச் சேவகஞ் செய்து வாழ்தலினும் பயிர்த்தொழில் செய்து வாழலே மேல் என நமது அவ்வையாரும் கூறியிருக்கின்றனர். "தொழுதூண் சுவையின் உழுதூணினிது", "சீரைத்தேடின் ஏரைத்தேடு", மேழிச்செல்வங் கோழைபடாது" என்று நம் சிறுபிராயத்திற் கற்றன நம்முடைய நினைவிலேயே இருக்கின்றனவன்றோ? கம்பரும் இப்பயிர்த்தொழிலைச் சிறப்பித்தே ஏரெழுபது என்னும் நூலை இயற்றினர். இவ்வாறாக இப்பொழுது நம் இந்தியாவிற் பயிர்த்தொழில் பெரிதும் பாராட்டப்படுதலின்றிச் சிறிது சிறிதாகத் தனது மகிமை குன்றிப்போவதைப்பற்றி எண்ணுந்தோறும் எம் மனம் புழுங்குகின்றது.

பயிர்த்தொழிலை நன்கு செய்வதற்கு அதனைப்பற்றிய கல்வி உணர்ச்சி மிகவும் இன்றியமையாத தன்றே? நம்முடைய பயிர்த்தொழில் செய்யுங் குடியானவர்களுக்கு அப்பயிர்த் தொழிலைப் பற்றிய கல்வியைப் புகட்டுவார் யாவர்? நம்முடைய துரைத்தனத்தாரோ அன்றி மிக்க நிலமுடைய நம்முடைய பிரபுக்களோ? இக்

கல்வி விஷயமாக நாம் நம் துரைத்தனத்தார்மீது குறை கூறுவ திற் பயனில்லை. அவர்கள் சென்னைக்கடுத்த சைதாபுரத்திற் பயிர்த் தொழிற் கலாசாலை ஒன்று நாட்டி ஏதோ தம்மாலியன்றவளவு அக் கல்வியை ஜனங்களுக்குப் புகட்டி வருகின்றனர். இன்னும் அக் கல்வியில் நம்மவர்களுக்கு மிக்க ஆர்வம் பிறக்கவில்லை. ஆகை யாற்றான் அக்கலாசாலையிற் சென்று படிப்போர்தொகை மிகக் குறைவாயிருக்கின்றது. இக்குறைவிற்குக் காரணம் யாதென ஆராயுமிடத்து எமக்கொன்று தோன்றுகின்றது: உழவு தொழி லில் தலைப்பட்டு வேலை செய்யும் குடியானவர்களை அவ்வவ் வூர்க ளில் ஒருங்குகூட்டி அவர்களுக்கு முன்னே சில சோதனைகள் செய்துகாட்டி அவர்களை இப்பயிர்த்தொழிற் கல்வியால் மிக்க நன்மையுண்டென்று நம்பும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்கிறவரையில் நம்மவர்கள் இப்பயிர்த்தொழிற் கல்வியில் விருப் பங்கொள்ள மாட்டார்கள். இப்பயிர்த்தொழிற் கல்வியைப் பற்றிய பிரசங்கம் முதலியனவெல்லாம் ஆங்கில பாஷையில் இருந்தால் அவற்றால் நம் குடிகளுக்கு யாதுபயன்? அவை யனைத்தும் நம் உழவர்களெல்லாம் எளிதில் அறிந்துகொள்ளத் தக்கபடி நம் முடைய தமிழ்ப்பாஷையிலிருந்தாலன்றோ மிகவும் பயனுடையன வாகும்.

பயிர்த்தொழிலையே ஒரு கைத்தொழிலெனக்கொண்டு அதன் கண் கைம்முதலிட்டு வேலைசெய்தாலன்றி நம் நாட்டின்கண் பயிர்த்தொழில் மேம்படாது. பிறநாட்டில் விளையும் பொருள்க ளெல்லாம் நம் நாட்டிற்கு வந்து மிகச் சுலபமான விலைக்கு விற் கும்போது நம்முடைய நாட்டிலேயே விளைகின்ற பொருள்களை நம்மவர் விரும்பிப் பெறுதலெங்கே? யாவரும் நயமான விலை யுள்ளதை யன்றோ நாடுவார்கள்? ஆகவே நம் நாட்டு விளைபொ ருள்கள் பிறநாட்டு விளைபொருள்களினும் விலை நயமாயிருக்க வேண்டுமானால் பிறநாட்டில் விளைகின்ற பொருளின் அளவினும் நம் நாட்டில் விளைகின்ற பொருளின் அளவு மிகவும் அதிகமா யிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தாற்றான் பிறநாட்டுப் பொருள் களினும் நம் நாட்டுப்பொருள்களை மிகக் குறைந்தவிலைக்கு விற்றல் இயலும். அவ்வாறு நயவிலைக்குப் பொருள்களை விற்க வேண்டு

மாகில் நம் நாட்டுக் குடியானவர்கள் நிலத்தின் பண்புகளையும் மண்ணின் தன்மைகளையும் எருவின் இயல்புகளையும் பற்றித் தாம் அறிந்துள்ள விஷயங்களோடு சிறிது அவற்றைப்பற்றிய நூல்களையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் இங்கிலாந்திற் சுயதேச வியாபாரிகளையும் பிறநாட்டு வணிகர்களையும் ஒப்பநோக்கிச் சட்டங்க ளேற்படுத்திய போது, ஜெர்மனி பிரான்சு முதலிய நாட்டின் விளைபொருள்கள் ஏராளமாய் வந்திறங்கின. அப்பொழுது இங்கிலாந்தின் பயிர்த்தொழில் தலைதாழ்ந்து போயிற்று. இஃதுணர்ந்த ஆங்கிலேயர் விழித்துக்கொண்டு பயிர்த்தொழிற் சங்கங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தியும் அவற்றின்கண் தமக்குவேண்டிய விஷயங்களை ஆராய்ந்தறிந்தும் தம்முடைய தேசவியாபாரிகளைக் கொண்டு அவர்கள் சென்ற புதிய புதிய தேசங்களினின்றும் நேர்த்தியான புதிய எருக்களைத் தருவித்துத் தம்முடைய நிலங்களிற் பெய்தும் உழுது பயிர்செய்து ஒன்றிற் கிரண்டாகப் பொருள்களை விளைத்தும் தலை நிமிர்ந்து நின்றனர். அதனாலன்றோ பயிர்த்தொழிலிற் சிறந்தவராக நம் ஆங்கிலேயர் மதிக்கப்படுகின்றனர்? அவர்களுக்கு இணையாகப் பிறநாட்டார் எவரையும் எடுத்துரைக்க முடியாது. நம் ஆங்கிலேயர் ஆஸ்த்ரேலியாவினின்றும் பேருக் கடற்கரையோரத்தில் ஆண்டீஸ் மலைச்சாரலிலும் மேலையிந்தியன் தீவுகளிலும் பல்லாயிரக் கணக்கான கூட்டங் கூட்டங்களாகக் கடற்பறவைகள் பலதங்குதலால் உண்டாகும் எருக்களைச் சீத்து வாரிப் பொதிகளாகக் கட்டிக் கப்பல் கப்பலாக ஏற்றித் தம் நாட்டிற்குக் கொணர்ந்து நிலங்களிலிட்டு அவற்றின் விளையுந் தன்மையை நாடோறும் உயர்த்திவருகின்றனர். இத்தன்மையான எருவிற்குக் * குவானோ என்று ஆங்கிலபாஷையிற் பெயர். இன்னும் நம் ஆங்கிலேயர் இன்ன நிலத்தில் இன்னபொருள் தான் விளையுமென்றும் இன்ன பொருளுக்கு இன்னநிலந்தான் தக்கதென்றும் நேரே பரீக்ஷித்தறிந்துகொண்டும் இன்னபொருள் விளைவதற்கு இன்ன எரு இடவேண்டு மென்றும் இன்ன எரு இட்டால்தான் இன்னபொருள் விளையுமென்றும் எருக்களைச்செய்யும்விதம் இன்னின்னவென்றும் நூல்களிற் படித்தும் பயிர்த்தொழிற் கல்விக்கென்று ஏற்பட்டுள்ள

* Guano.

சங்கங்களிற் சென்று அவற்றின் அவயவிகளோடு உசாவித் தடை விடைகளால் உண்மைகளைத் தெளிந்தும் தம்போலும் பிறர்க்கு அவ்வாறு தெளிந்த விஷயங்களை அறிவுறுத்தியும் வருதலா லன்றோ அவர்கள் இத்தொழிலின்கண் மேம்பாடெய்தினர்? இம் மேம்பாட்டிற் கெல்லாம் காரணமாயும் பேருதவியாயும் இருந்தவர் அந்நாட்டுத் துரைத்தனத்தார்களோ? அல்லர் அல்லர். மற்று அந்நாட்டின்கணுள்ள பிரபுக்களும் தனவான்களுமே முன்னுக்கு வந்து பொருட் செலவு செய்து தங்கீழுள்ள குடியானவர்களுக் குப் பயிர்த்தொழிற் கல்வி யுணர்ச்சி யெழுப்பி அவர்களைப் புது மைவழியி லுழைக்கும்படி செய்து கைதூக்கிவிட்டனர். அவ் வாறே நம் இந்தியாவிலும் நிலவுரிமையுடைய ரெனப்படுந்துரைத் தனத்தார் செய்யவேண்டியன ஒருபுற மிருப்ப, பிரபுக்களுந் தன வான்களுமாகிய சிற்றரசர்களும் குறுநிலமன்னர்களும் ஜமீந்தா ரர்களும் மிட்டாதாரர்களும் மிராசுதாரர்களும் முன்னுக்கு வந்து மூதல் சேர்த்துப் பயிர்த்தொழிற் கல்வியைத்தக்க ஆசிரியர்களைக் கொண்டு நம்முடைய சுயபாஷையில் நம் குடியானவர்களுக்குக் கற்பித்தாலன்றி நம் நாடு பயிர்த்தொழில் விஷயமாக முன்னுக்கு வருதல் அரிதென்பது நிச்சயம். இது விஷயமாக நாம் நம் துரைத் தனத்தாரிடத்தில் எல்லாவித உதவியையும் எதிர் பார்த்தல் நேரி தன்று. அவ்வாறு எதிர் பார்க்கினும் அவர்கள் நமக்கு அதிக மாக உதவியிடுவார்கள் என்று நம்பவேண்டாம். அவர்களெவ்வளவு மட்டில்தாம் உதவிசெய்வார்கள்? ஆகவே நம் நாட்டிற் பயிர்த் தொழிற் கல்வியை விருத்தி செய்யவேண்டியவர்கள் நம்மவர்களே யன்றித் துரைத்தனத்தாரல்லர். ஆதலின், இந்தியர்காள்! சுதே சாபிமானிகாள்! சுதேசக் கைத்தொழி லபிவிருத்தியை விரும்பு வீர்காள்! இனியேனுங் கால தாமதஞ் செய்தலின்றி விழித்துக் கொண்டு நம் நாட்டிற்குத் தக்க விதமாகப் பயிர்த்தொழிற் கல்வி யை நம் நாட்டுக்குடியானவர்களுக்கு நன்ருகப்பயிற்றுவீராக. இத னைச் செய்தல் நமது கடமைகளுள் மிகச் சிறந்ததெனா நாம் யாவ ரும் அறிந்து அதற்குத்தக நடப்போமாக.

[ஈண்டு எழுதிய விஷயங்களுட் பெரும்பாலன நம் நண்ப ருள் ஒருவரும் ஆங்கில நாடு சென்று பயிர்த்தொழிற் கல்வியிற்

பட்டம் பெற்றுப் போந்தவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆர். சுவாமிநாத ஐயரவர்களோடு செய்த சம்பாஷணையின் மூலமாக அறிந்துகொண்டனவாம். அவற்றை நம்பத்திரிக்கை படிப்போர் யாவரும் அறிந்து கொள்ளும்படி இங்கே வரைந்தனம்.]

பத்திராதிபர்.

---

# RAMAYANAM.

## இராமாயணம்.

இராமாயணம் என்னும் இவ்விதிகாசம் வான்மீகியாரால் இயற்றப்பட்டது. இதன் உத்தரகாண்டத்தில் ஐம்பத்தேழாவது சருக்கத்திற் கூறியபடி வான்மீகியாருடைய ஆச்சிரமம் கங்கையின் தென் கரைக்கண்ணதாகலானும், முதற்காண்டமாகிய பாலகாண்டத்து ஐந்தாஞ் சருக்கத்திற் கூறியபடி இது கோசல நாட்டை அரசு செய்த இக்ஷ்வாகு குலத்தார் சரித்திரமாகலானும் இது பிறந்த இடம் கோசலநாடென்பது பெறப்படும். கோசல நாட்டில் வாழ்ந்த சூதர்களிடத்தில் இக்ஷ்வாகு குலத்தரசருட்சிறந்த இராமனுடைய வலியையும் கொற்றத்தையுங்கூறுஞ் சிற்றிதிகாசங்கள் பல எழுதாக்கேள்வியாய் வழங்கி வந்தனவாக, அவைகளை ஆதாரமாகக்கொண்டே வான்மீகியார் இதனைச் செய்தார் என்று கொள்ளப்படுகின்றது. கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதம் செய்ததுபோலச் சிற்றிதிகாசங்கள் பலவற்றை ஒன்று சேர்த்து ஒரு பெரு நூலாக யாக்காது வான்மீகியார் அக்காலத்து வழங்கிவந்த சில சிற்றிதிகாசங்களிலுள்ள கதையை மாத்திர மெடுத்துக்கொண்டு அதை யமைத்துத் தாமொரு நூலியற்றினரென்க. மகாபாரதத்தைப் போலவே இராமாயணமும் முதலில் எழுதாக்கேள்வியாய்ப் பயின்று வந்தது. நூல்களை நெட்டுருப்பண்ணி அவைக்களங்களிற் பாடுவதே தந்தொழிலாகவுடைய குசீலவர்கள் அதனைக் கற்றுக்கொண்டு தாஞ்செல்லுந் தேசங்கடோறுமுள்ள ராஜசபைகளிலும் மற்று மிடங்களிலும் எடுத்தோதி வந்தார்கள். இந்தக் குசீலவர்களையே பிற்காலத்தார் இராமன் புத்திரர்களாகிய குசலவர்களாக்கிவிட்டார்கள். காவிய இலக்கணங்களுக்கியைய

முதன் முதற் செய்யப்பட்டமையின் இராமாயணம் ஆதிகாவிய மெனப்பெயர் பெறும.

இது வான்மீகனாராற் செய்யப்பட்டபோது ஐந்து காண்டங்களையே உடைத்தாயிருந்தது. ஏழாவதாகிய உத்தரகாண்டம் வெகு காலத்திற்குப்பின் இயற்றிச் சேர்க்கப்பட்ட தென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆறுங்காண்டத்தின் முடிவே முன்னர்க் காலத்தில் நூன் முழுமைக்கும் முடிவாயிருந்த தென்பது மிகத் தெளிவாய்த் தெரிகின்றது. முதலாவதாகிய பாலகாண்டத்துள்ள பல பாகங்கள் பின்வருங் காண்டங்களிலுள்ளவைகளோடு முரணுகின்றன. அதுவுமன்றி அதனிடத்து இரண்டு அநுக்கிரமணிகைகள் காணப்படுகின்றன. அவை முதற்சருக்கமும் மூன்றும் சருக்கமும். இவைகளிரண்டும் ஒரே காலத்திற் செய்யப்பட்டனவல்ல. முதற்சருக்கம் பால காண்டக்கதையையும் உத்தர காண்டக்கதையையும சங்கிரகித்துக்கூறுமையின், அஃது அவ்விரண்டு காண்டமும் வான்மீகர் இயற்றிய நூலோடு சேர்க்கப்படு முன்னர்ச் செய்யப்பட்ட தென்பது தேற்றம். அயோத்தியா காண்டத்தில் முதலில் நூலிற்குத் தொடக்கமா யிருந்த பாகம் அதனினின்றும் பிரிக்கப்பட்டு இப்போது பாலகாண்டத்தில் ஐந்நாஞ் சருக்கத்திற்குத் தொடக்கமா யிருக்கின்றது. இவைகளே அன்றி, வான்மீகனாராற் செய்யப்பட்ட நடுவணைந்து காண்டங்களிலும் சில சருக்கங்களும் சுலோகங்களும் புதிதாகச் செய்து சேர்க்கப்பட்டுள்ளன. இவைகள் முன்னும் பின்னுமுள்ள சருக்கங்களோடும் சுலோகங்களோடும் ஒட்டப்பொருந்தாமையின் யாவருங் கண்டுணரற் கெளியவைகளா யிருக்கின்றன. இவைகளையெல்லாம் மேலைத்தேசத்துப் புலவராகிய * ஆசிரியர் ஜாக்கோபியார் மிக நுண்ணிதாக வாராய்ந்து நிரூபித்துள்ளார்.

இராமாயணத்தில் இப்போதுள்ள சுலோகத்தொகை இருபத்து நாலாயிரம். உத்தரகாண்டத்தில் நூலினளவு கூறுமிடத்து இராமாயணம் ஆறு காண்டத்தோடு ஒருத்தர காண்டமுமுடைத் தென்பதும் ஐஞ்ஞூறு சருக்கமும் இருபத்து நாலாயிரஞ் சுலோகமுங் கொண்ட தென்பதும் சொல்லப்பட்டுள. இதனால் உத்தர

* Prof. Jacobi.

காண்டம் சேர்க்கப்பட்டது இராமாயணம் பலவாறு வளர்ந்து இப்போதுள்ள அளவினதாயபோதென்பது செவ்வனே புலப்படும். மகா பாரதத்திற்குரைத்தது போல் இராமாயணம் ஆதியில் இத்தனை சுலோகங்கள் கொண்டதா யிருந்ததென்று கூறமுடியாது. அக்கணக்கு நூலின் எவ்விடத்தும் சொல்லி இல்லை. மகா பாரதத்தைப்போலவே இராமாயணமும் காலஞ் செல்லச் செல்ல வளர்ந்து கொண்டு வந்தது. புதிய உபாக்கியானங்களும் கதைகளும் வேண்டிய வேண்டியாங்குச் சேர்க்கப்பட்டு மகாபாரதம் வளர்ந்தது; இராமாயணம் அங்ஙனமன்றி ஓரிடத்திற் கூறிய கதைகளையும் காட்சிகளையுமே பெயர்த்தும் பெயர்த்தும் இரண்டு மூன்றிடத்திற் கூறுவதனாலும் வருணிப்பதனாலும் வளர்ச்சி அடைந்தது. இராமனுடைய குணங்களின் மேன்மையையும் சீதையினுடைய கற்பின் மிகுதியையும் மீட்டும் மீட்டும் புகழ்வதற்காகப் பல சுலோகங்களும் சருக்கங்களும் புதிதாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன. இராமனைக் காட்டிற் கனுப்பிவிட்டுத் தசரதனடைந்த துன்பமும், அவனைப்பிரிந்து தாயாகிய கோசலை பட்ட வருத்தமும் பிற்காலத்தில் தோன்றிய புலவர்களால் அநேக புதுச்சுலோகங்களில் வருணிக்கப் பட்டுள்ளன. அவ்வாறே இராமனுடைய தம்பிமார்களது அன்பும் ஆண்மையும், முனிவர்களது தவத்தின் பெருமையும், அவர்கள் வாசஞ் செய்த இடத்தின் சிறப்பும் எத்தனையோ முறை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சீதையை யிழந்ததனால் இராமனடைந்த பெருந்துக்கமும் அவளை மீட்பதற்காக அவன் செய்த முயற்சிகளும், புரிந்த யுத்தங்களும் இராமாயணத்தில் எண்ணிறந்த புலவர்களால் விரித்து விரித்துச் சொல்லப் பட்டுள்ளன.

இராமாயணஞ் செய்துள்ளது சுலோகத்தால். அதுவே சம்ஸ்கிருதப்பாக்களுளெல்லாம் செய்ய எளிதானது. அதனால் அது புலவர்களுக்கு வேண்டியபடி புதுச்சுலோகங்களையுஞ் சருக்கங்களையும் செய்து சேர்க்க இடங்கொடுத்தது. அதனாலேயே ஒரு சருக்கத்தில் நன்றாக விரித்துரைத்துள்ள சம்பவங்கள் அதனையடுத்துத் தொடர்ந்து வரும் இரண்டு மூன்று சருக்கங்களில் மீட்டும்மீட்டும் கூறப்பட்டுள்ளன. இச்சொருகுகவிகளால் நூல் அழகு

கெட்டதொன்றன்றி ஒருமுறை கூறியதனையே மறித்தும் மறித்தும் கூறுவதனாற் கதை யினிமையும் பாழ்பட்டுக்கிடக்கின்றது.

இனி இராமாயணம் தோன்றிய காலத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். மகா பாரதத்தின்கணுள்ள உண்மையான இதிகாசப் பாகங்கள் ஒன்று சேர்த்து ஒரு வழிப்படுத்தப் படுமுன்னம் இராமாயணத்தில் வான்மீகனரால் இயற்றப்பட்ட பாகங்கள் தோன்றி யிருக்க வேண்டுமென்பது புலப்படுகின்றது. இராமாயணத்திற் பாரத வீரர்களின் கதைகள் சொல்லப்படாதிருக்க, மகா பாரதத்திற் பல விடங்களில் இராமனுடைய சரித்திரம் குறிக்கப்பட்டுளது. அன்றியும் மகா பாரதத்திற் கர்ண பருவத்தில் இராமாயணத்து யுத்தகாண்டத்திலிருந்து ஒரு சுலோகம் எடுத்தாளப்பட்டுளது. இவைகளினுல் வான்மீகியாரியற்றிய ஆதி காவியம் மகா பாரதம் யாக்கப்படுகின்ற காலத்தில் ஒரு பழநூலாக வழங்கிவந்திருக்கவேண்டு மென்பது தேற்றம். மகா பாரதத்தில் வனபருவத்திற் கூறப்பட்டுள்ள ராமோபாக்கியானத்திற்கு முதனூல் வான்மீகி ராமாயணமே போலும். அதன் சுலோகங்கள் சில வான்மீகியின் சுலோகங்களோ டொத்திருக்கின்றன. அதனை இயற்றினவரும் அதனைக் கேட்பவர்கள் இராமாயண மறிந்தவர்களாயிருப்பார்கள் என்ற எண்ணத்தோடேயே இயற்றினவராய்த் தோன்றுகின்றனர்.

புத்த சமய நூல்களுள் ஒன்றாகிய புத்த ஜாதகக்கதையில் தசரத ஜாதகத்தில் இராமனுடைய கதை கூறப்பட்டுளது. இதிற் கூறப்பட்டகதை இராமனுடைய வனவாசத்தோடு முடிகின்றமையின் தசரத ஜாதகம் இராமாயணத்திற்கு முற்பட்டதென்பது தோன்றும். ஆயினும் தசரத ஜாதகத்தில் அதை யியற்றினவருக்கு இராமன் இலங்கைக்குச் சென்றதும் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்குச் சில குறிகள் காணப்படுகின்றமையானும் இராமாயணத்து யுத்த காண்டத்தில் உள்ள சுலோகம ஒன்று அதில் உரைநடையிற் சேர்த்து எழுதப்பட் டுண்மையானும் இராமாயணம் தசரத ஜாதகத்திற்கு முற்பட்டதென்று இப்போது கொள்ளப்படுகின்றது. புத்தனைப்பற்றி இராமாயணத்தில் ஓரிடத்திலேயே குறிக்கப்பட்டுளது. அது பிற்காலத்திற் புதிதாய் இயற்றிச் சேர்க்

கப்பட்ட பாகத்திலாதலின் மேற்கூறிய கொள்கைக்குச் சிறிதும் மூராணுகாது.

இராமாயண நூலுடையார்க்குக் கிறிஸ்துபிறக்க மூந்நூறு வருஷங்களுக்குமுன் இந்தியாவிற்கு வந்த கிரேக்கர்களைத் தெரியுமோ வென்பதும் இராமாயணத்தின் கால நிர்ணயத்திற்கு ஒருதவியாகும். கிரேக்கர்களாகிய யவனர்களைப்பற்றி இராமாயணத்தில் இரண்டிடத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது. அது பால காண்டத்திலும் கிஷ்கிந்தா காண்டத்திலுமாம். இவையிரண்டும் பிற்காலத்திற் புதிதாய் இயற்றிச் சேர்க்கப்பட்ட பாகங்கள் என்று மேற்கூறிய ஆசிரியர் ஜாக்கோபியார் காட்டியிருக்கின்றனர். ஆகவே இது வான்மீகியார் இயற்றிய இராமாயணத்தில் இப்பாகங்கள் சேர்க்கப்பட்டது இந்தியாவிற்குக் கிரேக்கர்கள்வந்ததன் பின் என்பதையே காட்டும்.

இராமாயணத்தில் இந்தியாவின் கீழ்பாகத்தில் இருந்தனவாகக் கூறப்படும் இராச்சியங்களும் அதன் கால நிர்ணயத்திற்கோராதாரமாகும். இராமாயணத்திற் பாடலிபுத்திர நகரத்தைப்பற்றிச் சொல்லப்படவே இல்லை. அது கிறிஸ்துபிறக்க மூந்நூற்றெண்பது வருஷங்களுக்குமுன் வைசாலி நகரத்தில் இரண்டாம் புத்த சங்கம் இரீஇய காலாசோக அரசனால் உண்டாக்கப்பட்டது. கிரேக்கர்கள் இந்தியாவிற்கு வந்தபோது அஃது இந்தியாவிற்குத் தலைநகரமாயிருந்தது. பாலகாண்டத்தில் முப்பத்தைந்தாஞ் சருக்கத்திற் பாடலி புத்திர நகரம் இருந்த இடத்தின் வழியாக இராமர் போனதாகக் கூறப்பட்டுளது. முப்பத்திரண்டாம் முப்பத்து மூன்றும் சருக்கங்களிற் பாலகாண்டத்தை இயற்றினவர் இராமாயணத்தின் பெயர் எவ்வளவுதூரம் பரவியிருந்த தென்பதைக் காட்டுதற்குப்போலும், இந்தியாவின் கீழ்பாகத்திருந்த கௌசாம்பி, கான்யகுப்ஜம், காம்பிலி ஆதியாம் பலநகரங்களின் தோற்ற வரலாறுகளை எடுத்துக் கூறியிருக்கின்றனர். அந்தக் காலத்திற் பாடலிபுத்திரம் இருந்திருக்குமாயின் அது தோன்றிய வரலாற்றையும் அவர் கூறாதுவிடார்.

இராமாயணத்தில் வான்மீகியார் இயற்றிய பாகத்தில் வருமிடங்கடோறும் கோசல நாட்டிற்குத் தலைநகரம் 'அயோத்தியா'

வென்றே கூறப்பட்டுளது. அதனைப் பௌத்தர்களும், சமணர்களும், கிரேக்கர்களும் பதஞ்சலியாரும் எவ்விடத்தும் சாகேதமென்றே கூறுகின்றனர். உத்தரகாண்டத்தில் இராமன் குமாரனுகிய லவன் சிராவஸ்தி என்னும் நகரத்தைத் தனக்கு ராஜதானியாக்கிக் கொண்டான் என்று சொல்லப்பட்டுளது. புத்தனுடைய காலத்திற் கோசல நாட்டை அரசாண்ட பிரசேனஜித்து என்னும் அரசனும் சிராவஸ்தியிலிருந் தரசாண்டதாகவே தெரிகின்றது. இவைகளெல்லாம் பழைய அயோத்திநகரம் குடி எழும்பாத முன்னும், அதுவே கோசல நாட்டிற்குத் தலைநகரமாய் இருந்தபோதும், அதற்குப் புதிதாய்வந்த சாகேதம் என்னும் பெயர் வழங்காததற்கு முன்னும், சிராவஸ்தி என்னும் நகரம் ராஜதானி ஆக்கப்படாததற்கு முன்னும் இராமாயணத்தின் பழம்பாகம் இயற்றப்பட்டதென்பதை நன்கு புலப்படுத்துகின்றன. அன்றியும் பாலகாண்டத்தில் மிதிலையும் விசாலையும் இரண்டு நகரங்களாகவும் வெவ்வேறரசர்களால் ஆளப்பட்டனவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளிரண்டும் புத்தர் காலத்தில் வைசாலி என்று பேர்பெற்ற ஒரு நகரமாகி ஓரரசின் கீழாகி விட்டது.

இதுகாறும் கூறியவாற்றால இந்தியாவிற் புத்த சமயம் தோன்றுவதற்கு முன்னரேயே வான்மீகியாரால் இராமாயணம் இயற்றப்பட்டதென்பதும் புதிதாய்ச் செய்து சேர்க்கப்பட்டனவாகிய பாலகாண்டம் முதலிய சில பாகங்களும் அக்காலத்திலேயே சேர்க்கப்பட்டு விட்டனவென்பதும் தெரிய வருகின்றன. இதனினும் வரையறவாக இதைப்பற்றிச் சொல்லுதல் கூடாது.

சில மாசங்களுக்குமுன் வான்மீக ராமாயணத்தைத் தமிழ் வசனநடையில் மொழிபெயர்த்து வெளியிட்ட பண்டிதர் நடேச சாஸ்திரியார் தமது முகவுரையில் "மகாபாரதம் உண்டாவதற்கு வெகு காலங்களுக்கு முன் இராமாயணம் தோன்றி எழுத்தில் ஏற்படுத்தப்படாமல் வேதம் போல் ஜனங்களுக்குள் அத்தியயன ரூபமாய் விளங்கிவந்ததென்றும், இராமாயணத்திற் கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் மகாபாரதத்திலிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் பழமையான விஷயங்கள் என்றும் தெரிகிறது" என்று கூறித் தமது கொள்கைக்கு ஏழு காரணங்களும் எடுத்துக் காட்டியிருக்

கிறார். இங்ஙனம் பண்டிதர் கொண்ட கொள்கை நாம் மகாபாரத ராமாயணங்களைப் பற்றி எழுதியவற்றில் எடுத்துக்கூறிய கொள்கையோடு ஒற்றுமை யுடைத்துப்போறறேன்றினும் அஃது உண்மையில் அங்ஙன மன்றென்பதை இங்குச் சிறிதெடுத்துக் கூறுவாம்.

பண்டிதர் மகாபாரதத்திற்கு இராமாயணம் முந்தியதென்றும் முன்னையதிற் கூறும் விஷயங்களினும் பின்னதிற் கூறும் விஷயங்கள் பழமையானவை யென்றும் கொண்டிருக்கிறார். பாண்டவர்களுடைய காலம் இராமனுடைய காலத்திற்குப் பிந்தியதென்பது அவர் கொள்கைபோலும். எமது கொள்கை அதுவன்று; பாண்டவர்களுடைய காலம் முன் என்றும் இராமனுடைய காலம் பின் என்றும் நாம் கொள்கின்றேம். இந்தியாவிலுள்ள ஆரியர்கள் இமயமலைக்கு அப்புறத்திலிருந்து வெகு காலத்திற்கு முன் இங்கே வந்து முதலிற் பஞ்சநதீ தீரங்களிற் குடியேறிப் பின்னர்க் கிழக்கிலும் தெற்கிலும் மற்றை யிடங்களிலும் பரவினர்கள் என்பது இப்போது வழக்காற்றிலுள்ள கொள்கை. இஃதுண்மையாயின் உத்தரத்திலுள்ள அஸ்தினபுரத்தில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலம் அங்நகரத்திற்குத் தென்கிழக்கிலிருந்த அயோத்தியில் வாழ்ந்த பழைய அரசர்களின் காலத்திற்கு முற்பட்டதென்பது பெறப்படும். பாரத யுத்தம் நடந்த காலத்தில் ஆரியர்கள் பஞ்ச நதீதீரங்களைக் கடந்து கிழக்கிலும் தெற்கிலும் பரவி இராச்சியங்கள் ஏற்படுத்தினதாகக் காணப்பட வில்லை. ஒரு பெண் நாயகர்கள் பலரை மணத்தலாகிய அநேகபதி விவாகம் முதலிய மிகப்பழைய வழக்காறுகள் பாண்டவர் காலத்திருந்தமையின் பாரத யுத்தம் நடந்த காலம் மிகவும் முற்பட்டதென்பது தேற்றம். இராமனுடைய காலத்தில் இவ்வகை வழக்காறுகள் இருந்தனவாகத் தெரியவில்லை. மகாபாரதத்தில் அநேக ராச்சியங்கள் தக்ஷிணத்தில் இருந்தனவென்றும் யவனர் முதலிய ஜாதியார் அநேகர் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுளதே என்னின், இவைகளெல்லாம் பிற்காலத்திற் புதிதாய்ச் சேர்க்கப்பட்ட பாகங்களிற் காணப்படுகின்றனவே அன்றி ஆதியில் தோன்றிய பாகங்களில் அல்ல என்பது. மகாபாரதம் முதலில் எழுதாக்கேள்வியாயே பயின்று வந்த

தென்றும் அதில் விநாயகர் அதனைக் கொம்பினுல் மேருமலையில் எழுதினர் என்று கூறும் பாகம் பிற்காலத்துச்செய்து சேர்க்கப் பட்டதென்றும் அஃது எல்லாப் பிரதிகளிலும் காணப்படவில்லை யென்றும் முன்னரே கூறியுள்ளோம். இவைகளினற் பண்டிதர் தமது கொள்கைக் காதாரங்களாகக் காட்டும் காரணங்கள் எழும் அவர் கொள்கையை வலியுறுத்தாமை கண்டு கொள்க.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

---

# THE CULTURE OF THE INTELLECT.

## உள்ளப் பயிற்சி.

### VI. மனோதர்மம் அல்லது கருத்துணர்வு. (Imagination.)

இனி இதை யடுத்துச் சிறப்பாகப்பயிற்சியடையவேண்டியதோ ராற்றலுளது. அது மனோதர்மமாகும். ஆசிரியராதல், மாணக்கராதல், இவ்வாற்றலுக்குரிய நேரிய பயிற்சியினது இன்றியமையாமையைப்பற்றிப் போதுமானவளவு வலியுறுத்தப் பட்டிலரோ வென்று அஞ்சுகின்றேம். இது, "கட்டுக்கதையைச் சார்ந்ததே யன்றி மெய்ப்பொருளைப் பற்றியதன்று" என்றும், "தக்க திருத்தப்பாடுடைய அறிவைக் கைக்கொள்ள விரும்பும் கோடாத நெறியுடைய மாணக்கனுக்கு யாதும் பயன்படற் பாலதன்று" என்றும், மனோபாவத்தை எள்ளுவாரும் சிலர் உளர். இஃதுண்மையன்று. புதிது புதிதாகத் தோற்றுவிக்கும் மனோபாவத்தின் மேன்மேலு மோங்குறூஉம் வன்மை காரணமாகவே, சீரிய நூற்றுணிவுள்ள மக்களிலுயர்ந்தோர் மிகச் சிறந்த தங்கள் காட்சிப் பொருள்களை ஆராயத்துணிந்தன ரென்பது யாவரும் நன்குணர்ந்த விஷயமே. பௌமிய நூலிலும், என்பியல் நூலிலும், கீதை என்னும் பாவலர் கண்டருளிய புதுமையான கருத்துக்கள் இதற்குத் தக்க சான்று பகரும். அற்றேல் நியாயமின்றித் தன்னிச்சையாய், நிலையற்று மனம் போனபடி யெல்லாம் சென்றுழியே மனோபாவம் நூலறிவினுக்குத் தீரா விரோதியாம். நியாய வொழுங்கிருப்பின், அது பலவாற்றானும் துணைக் கருவிகளுள் மிகச்சிறந்ததும் இன்றியமையாததுமாகும். அதான்றியும், சரித்திரத்திலும் பொருளியல் உணர்ச்சியிலும், செய்யுளியலிற்போன்று மனோபாவம் மிக்க வின்றியமையாததாகின்றது. மெய்யாகவே, சரித்திரக்காரன் தனக்குவேண்டிய விஷயங்களைப் புதுவதாய்ப் படைத்துக்காட்டவியலாது. ஆயினும் தன் விஷயங்களை அவன் அழகுற இயைத்து, நல்லுருவோடு வகுத்து, ஒழுங்குபடுத்தல் வேண்டும். இவ்வாறியைப்பது மனோபாவத்

தின் தொழிலேயாம். எவ்விதமான அரம்பைமகளிர் கதைகளும், விசித்திரக் கட்டுக் கதைகளும், உறுதியாகவே பயன்படத்தக்கன. இவையிற்றை மனோ தர்மப்பயிற்சியினுக்குக் கவலையாய் உபயோகப்படுத்தினும் இழுக்கில்லை. ஆயினும், இம்மனவலியின் மிக்க பயன்படத்தக்க பயிற்சி இது மெய்ப் பொருளோடு இயையும்போதேயாம். ஆகையின் மாணக்கன் இன்னணம் பயில வேண்டும் என்று யாம் வற்புறுத்துகின்றும். மனத்தைக்களிப்பித்து மனோபாவத்தை ஓங்கச்செய்யும், மக்கட்பண்பு, சிறப்பு, ஆகிய இவையிற் றின் காட்சிகளின் பொருட்டுக் கட்டுக்கதைகளைப் படித்தல் அவசியமன்று. தாமே படைக்கும் காலச்சரித்திரத்தைச் சுருக்கிக்கூறும் இவ்வுலகெனும் பேராடரங்கிற்போதரும், கரிகாற்சோழன், உக்கிரகுமார பாண்டியன், சிவஞானசுவாமிகள் என்றின்னோரன்ன பெயர் பெற்ற மக்களின் வாழ்க் கை; மேற்சாற்றிய பயனின் பொருட்டே இது காறும் வரையப்பட்டுள மிகச்சிறந்த வினோத நூலினும் மிக்க கல்விப்பயன் பெற்றுளது; சாலவுஞ் சிறந்த செய்யுளினும் மிக்க மதிப்புவாய்ந்துளது. எல்லா மனமுமே செய்யு ணடையிற் களிப்படைவனவல்ல. ஆனால், மனத்தைக் கவரத்தக்கதும், முத லடியிலேயே நன்கு புலப்படத்தக்கதுமான விஷயத்தினால் எல்லா மனமும் அரும்பி உயர்ந்தோங்கும். சிறந்த நன்னெறி பற்றி ஒழுகும் மக்களின் வாழ்க் கைகளில் மனத்திற் பன்முறையும் கருதிப்பயில்வது ஒன்றிரண்டாம் வா ணிகமாம், ஓரேயடியில் முன்னர்ச் செய்யப்பட்டனவும் இனிச்செய்ய வேண்டுவனவும் ஆகிய இவ்விரண்டையும் மிகப்பயன்படத் தக்கவாறு நாம் அறிகின்றோமாகலின். ஆனால் மனோபாவத்தைப் போதியவளவுபயிற்று தற்கு; மனக்கண்ணின்முன் ஊக்கமெழுப்பும் தோற்றங்களை இனிமையாய்த் தோன்றும்படி செய்வது மட்டும் போதாது. இத்தகைய மனத்தின் கேவ லம் செயப்பாட்டு நிலைமையினின்றும் ஒருவித ஆற்றலும் வளராது. தொன் னூல்களை முடித்துக் கண்களை மூடிய வளவில் தனது மனத்தின் கண்ணே கதைப்போக்குக்களை எல்லாம் ஒழுங்காய்ப் பொருத்தமான குறிகளோடும் நிலைமையோடும், தோற்றத்தோடும், தனித்தனி மனக்கண்ணின் முன்னர்க் கொண்டுவரும் வன்மை பெறும் வரையில், மாணக்கன் திருப்தியடைத லின்றி அவற்றின் அழகிய சாயல்கள் செல்வுழி அவைகளை உறுதியாகப் பற்றிக்கொள்ளும்படி தனது மனோபாவத்தைத் தூண்டவேண்டும். வாழ்க் கையில் நன்றாகக் கண்களைத் திறந்துகொண்டு நடந்து செல்வதாகத் தோன் றினாலும் ஒன்றையுங் கவனித்துக் காணுக மாக்கள் இருப்பது போன்றே இடையிடைக் கிடைக்குமவகாசத்தில் மனோபாவத்தை எழுப்பும், அல்லது, இடுக்கண் வந்துற்றகாலை மக்களுக்குப் பொறுமை ஊட்டிப் புறங்காக்கும், மிக்க பயனுள்ள கதையிற்பட்ட மெய்க்கற்பனைகளுள் எதாயினு மொன் றைப்பற்றிக் கொள்ளாமல் நூல்கள் முழுமையும் படிக்கும், அன்றி, விஷ யங்களைப் பொருள் நோக்காது திணிக்கும் வேறு சிலருமுளர். ஆதலான்

எப்போதும், சிறந்த நூலின் பகுதி யொன்றை நீவிர் கற்ற பிறகு அப்பக்கங்களில் யாது பதிப்பித்திருக்கிறது என்பதல்லாது, நுமது மனச்சித்திரக் கூடத்தில் ஒளிரு மோவியம் யாதென நும்மையே வினவிக்கொண்மின். நுமது மனோபாவம், ஒளியுடைத்தாகவும், விசித்திரமாகவும், மெய்ப்பொருளுடைத்தாகவும், வைத்துக்கொண்மின். ஒரு விஷயம் நிகழ்ந்ததென்று மட்டும் நுமக்கு உணர்ச்சியிருந்தால், அதனை நீவிர் உணராததாகவே கருதுமின். அது நிகழ்ந்தவாறே இப்போது நுமது மனத்தின் கண்ணும் தோன்றுமாயின், அவ்விஷயம் நுமக்குத் தெரிந்ததாகக் கருதலாம்.

VII. மனோபாவம் மக்களுள் ஒவ்வொருவரிடத்திலும் இருப்பதாக ஒருவாறு கருதக்கூடியதோ ராற்றலாயிருப்பினும், நாம் இயற்கை வனப்பு நூலெனக்கூறும், அறிவிற்குரிய வுணர்ச்சி, மனோவிகாரங்கள், ஆகிய இவையிற்றின் வகுப்பொன்றில் மிக்க இயைபுடைத்தென்பது தெரிகின்றது. மனிதன் மிக்க மனோபாவமின்றி இப்புவியினில் வாழலாம், அதான்றியும், ஆண்மையோடும் வாழலாமென்ப. வீடொன்று காற்று மழைகளை உட்செல்ல வொட்டாமல் ஒளிமட்டில் உட்செல்லத்தக்கதாய் நன்றாக அமைக்கப்பட்டிருந்தும் அருவருக்கத் தக்கதாயிருத்தலுங் கூடுமாகலின், அழகிய வீடொன்று கிடைத்தலியலும் போது ஒருவரும் இலக்கணக்குறைவுற்ற வீட்டிலிருக்கத் தாமே ஆவல் கொள்ளார். ஆகலின் இவ்வாழ்க்கைப் பயனைப்பெற விரும்பும் ஒவ்வொருவரும், பயிற்சியடைந்த மனோபாவத்திற்குற்ற வுணவாகிய அழகு என்பதனை நாடவேண்டும். தம்மாலியன்றதெல்லாம் செய்வதே அவ்வாழ்க்கைப் பெரும்பயனும். முன்னர்க் குறித்தாங்கு, ஒரு மனிதன் நூல்களான் மட்டுமே உயிர்த்திருத்தலில்லை எனுங்கூற்று உண்மையாயிருப்பின், அறிவினான் மட்டும் பிழைத்திருத்தலியலாது என்பதும் மெய்யே. "எப்போதும் சிறிதளவேனும் தேர்தல் செந்நலம் பயக்கும்" என்பது தற்கால மூதறிவுடையாரொருவர் கூற்று. அற்றேல், இக்கூற்றினாற் கேவலம் முறைப்பாடில்லாத உணர்ச்சி என்றும் நன்மை பயப்பதாம் என்று அவர் கூறக்கருதினாரல்லர். மற்று, "மிகச் சிறந்ததன்றேனும், தம் கண்ணிற்படும் யாவற்றையும், பின் நேரக்கூடிய பயன் கருதி ஒவ்வொருவரும் ஆராய்ந்து மேற்கோடல் அறிவுடைமையின் பாற்படும்" என்று கருதினர் போலும். மிகச்சிறந்த பொருள்கள் வேண்டிய போதெல்லாம் அகப்படா. நமக்கு அடிக்கடி புலப்படும் தீங்குகளனைத்தும், தத்தமது நல்லியல்பில்லாமலிருக்க வில்லை. ஆதலின், அவற்றைச் செல்லும்போதே கைப்பற்றுது இகழ்வது ஏற்புடைத்தன்று. தன் ஒழுங்குடை நாட்டத்திற்கு உற்ற நல்லிலக்காக ஒவ்வொரினைனும் குறியாய் வைத்துக்கொள்ள வேண்டியது, பொதுப்பட்ட அறிவன்று; மற்று, சிறந்ததும், அழகிதும், நல்லதுமான பொருள்களினுணர்ச்சியேயாம். மனோபாவத்தைப் பற்றிய மட்டில் இத்துணை யறிவு இயற்கைவனப்புநூற் பயிற்சியை மனம் விசேஷமாய் அடைந்துழியே பெற

லாம். வேறு வகையான் மொழியுமிடத்து, செய்யுள், சித்திரந்தீட்டல், இசை, பொதுவாக நற்கலைகள், ஆகிய இவையனைத்தும் உயர்வும் அழகும் வாய்ந்த பொருள்களைப் பல்வேறு வகைப்பட்ட ஒவ்வொரு முறையிலும் நிலைமையிலும் தோற்றுவித்தலின் மகிழ்ச்சியடையும். இவைகள் ஏதோ ஒருவகையான் அழகின்பாற்படுவனவாகாது, பயிற்சியடைந்த மனத்தினது சாரமும், மேன்மையுமான மலரின்பாற் படுவனவாம். நுட்பநோக்கினன் மட்டும் விஷயங்களை யறிந்து, உறுதிப்பாட்டொடு காரியங்களை நிறைவேற்றும் மனிதனொருவன், இவ்வுலகிற்பட்ட பெரும்படியான தொழில்களைச் செய்வதற்கு ஏற்றவனாகலாம். ஆயினும், அவன் நாகரிகமும் வனப்பு மற்ற பிராணியாயிருக்கலாம்; கோட்டமுள்ளோனும், இடங்கொடாதவனும், கொண்டதுவிடானும், பிடிவாத முடையானும், விடாப்பிடியாளனும், வீண்வாதக்காரனும், மானமிலானும், அன்றி அகந்தையாளனுமாயிருக்கலாம். இவ்வாறமைந்த ஒருவனது கோட்டங்களை இயற்கை வனப்பு நூற்பயிற்சியினால் நிமிர்ப்பது, சனசமூகத்திற்குப் பெரும்பயன் விளைக்கத்தக்கதே யன்றி, அத்தகையோனுக்கே இன்பவூற்றாகலாம். ஆகையால், சிறுவனொருவன் தனது மனோபாவத்திற்கு அழகு மிக்க பொருள்களனைத்தையும் அதன் இயற்கை உணவாகக் கொடுக்கத் தொடங்கட்டும். நகரத்தில் நூதனமாகக் கட்டப்பட்ட செம்மைசான்றதோர் கட்டிட மிருப்பின், அவன் அதனை நின்று நோக்கக்கடவன். செவ்விய ஓவியங்கள் காண நேர்ந்துழி, அவற்றின் நலத்தைச் சிறிது நுகருமாறு சிறிதேனும் கடைக்கணிக்கத் தவாவண்ணம் தனது செய்தொழிற் கடமைகளிலேயே ஆழ்ந்து கிடக்கவேண்டாம். விநோத சாலைகளில் மிகச்சாதுரியமாகப் பரியூர்வோர்களும், கைதேர்ந்த கரணம் போடுபவர்களும் இருந்தாற் கேவலம் குழந்தைகளை உவப்பிக்கும் போலி உபாயங்களென அவன் அவற்றைக் கருதற்பாலனல்லன். மற்று, இவைகளை, மக்கடம் உறுப்புக்களின் அதிசயிக்கத்தக்கவலியும் வணக்கமும் ஆகிய இவைகளின் நுட்பமான தோற்றங்களென அறிவுடையோன் ஒவ்வொருவனும் மெய்ச்சவேண்டும். பொதுவாகக் கூறுமிடத்து, உள்ளத்தேர்ச்சியை அடைய விரும்பும் சிறுவன் மெய்ச்சலாற்றலை வளர்க்கவேண்டும். உயர்வுவாய்ந்த பொருள்களை மெய்ச்சுவதனால், நாம் அதிசயிக்கும் பொருள்களைப்போன்று நாம் ஆகுமாற்றில் இரண்டொருபடி ஏறலாம். ஆதலின், இம்மன்பேருலகத்தின் நாப்பண், வழக்கமாய்ப் பெரிதும் அதிசயமடையாதவொருவன், இவ்வுலகின்கண் அதிசயிக்கத்தக்க பொருள்கள் மிகவும் இலவென்பதை நிரூபியான்; மற்று, தனதாற்றல்கள் குறுகிக்கிடக்கின்றனவென்றும் தான் சுருங்கிய அறிவுடையான் என்றுமே புலப்படுத்திக்கொள்வான். இயற்கை யொழுங்கின்படி வனப்புநூற் பயிற்சி அடைய விரும்பும் சிறுவன் செய்யக்கூடிய பெருந்தீங்கு ஒவ்வொரு பொருளிலும் குற்றங்காண்டலும், வியப்பின்மை யென்னும் அணங்கின் வறுநலம் வேட்ட

லுமாம். உள்ளுடைந்து மூப்படைந்து வெறுப்புற்றவனிடத்தில் இஃதோராற்றாற் பொருந்தினும் பொருந்தும். முன்னுக்கு வரவேண்டிய இளைஞனொருவனிடத்தில் இஃதொருபோதும் பொருந்துவதன்று. தானே உறுதிப்பொருளொன்றும் இயற்றாது, மற்றையவர்களின் காரியங்களிற் குற்றங்காணும் தொழிலை மேற்கொண்டு அன்னணம் குற்றம் படைத்துக் காட்டற்றொழிலை ஆராய்ச்சி யென்று வாய்ப்பறையறையும் சிறுவனொருவனிடத்தில் நலமொன்றேனு மிருக்குமென்று எதிர்பார்த்தலடாது. இளைஞனொருவன் கற்கவேண்டிய முதற்பாடம் **குற்றம் பார்த்தலல்லாது நயங் காண்ட**லேயாம். ஆராய்ச்சியென்னும் பெயர்க்குரியனவெல்லாம், மதிநுட்பமும், தீர்க்கானுபவமும் கலந்துமிக் கனியுங் நற்கனியாம். பழக்கமுற்ற மூப்படைந்த வீரரொருவரே போரில் இங்ஙனமே பொருகவென்பதை விளம்பலியலும். என்னை ?

" நூலை யுள்ளபடி யாய்வலெனு நொய்யமகனே
போலி யாயபல தோமுரைசெய் புன்மைநெறியாய்
சீல முள்ளபுல வோர்மனதின் செவ்வியுணராய்
வேலை யொத்தநின வீண்மொழி விடுத்தியொழிதி.

பாந்த ளேபிறிது பாந்தளின பாதமுணரும்
வாய்ந்த மாதறி மகாருமை வந்தியுணரா
ளாய்ந்த செய்யுணல மான்றகவி வாணரறிவா
ரேய்ந்த வூறுணரு மோர்விழிய வெங்ஙனறிவாய் ?

மதுர மிக்கொழுகு மாங்கனி வடித்தசுவையார்
முதுத மிழ்க்கவியை முற்றுணர்கி லாதுபிசிதத்
துதிக ருங்கனியை யொத்தகுறை யோருமுறையாற்
கொதிக ஞென்றுறு கொடுங்கொடி நிகர்ப்பைகொடியோய்! "

என்ற பாவலர் கோமான் வாக்கையும் காண்க. பல்வகை விஷயங்களிற் சிறுவர்களுக்கு உண்மையாகவே ஓர் அபிப்பிராய மிருக்கலாம், அன்றி அங்ஙனமிருத்தலும் மேதக்கதே. ஆயினும், அவையிற்றை அவர்கள் வெளிப்படுத்துவதற்கு யாதொரு நியாயமுமில்லை. அநுபவமுதிர்ச்சி யில்லாத ஆராய்ச்சித் திறமுடைய மக்களான் வெளிப்படுத்தப்படுங் கோட்பாடுகளெல்லாம் ஜனங்களை அல்வழிப்படுத்தலே யன்றி, அதன் காரணமாக வெழூஉம் ஆக்கியோனது போலி மகிழ்ச்சியையுமே விளைக்கற்பாலன.

" கண்ணி லாதுழல் கசட்ட றிவி ஞயனுகலை
யெண்ணு மிவ்விட மெலாமினிய தூய்மையுடைய
வுண்ணி லாமலெழு தந்ததுகொ லுன்றனகைதான்
மண்ணி லிவ்விடையின் வாரலை மயங்குபொறியாய் !"

வனப்பு நூற்பயிற்சிக்கு, இயற்கையிலும் தொழிலிலும் பெருமை வாய்ந்ததும் அழகு மிக்கதுமானவைகளே இயல்பான அன்றிச் சுகமான வுணவெனச் சாற்றினேம். நற்பொருள் விளைவுகளும், நகைப்பொருள் விளைவுகளும் துணைக்கருவிகளாக மட்டுமே பயன்படத்தக்கன. ஒருவன் தான் நகைக்க முடியாதுபோயின் அஃது அவனுக்குப் பெரு நஷ்டமேயாம். ஆயின், ஒரு புன்னகையினுற் பொருந்தாதனவற்றை மெதுவாய் நாம் தொலைத்து விடுதலியலும். இதன் காரணமாக நகைத்தல் மிகவும் பயன்படத்தக்கது. மற்று அதை நாம் பரிபாலிக்கும்படி கூறுவதன் காரணமாகவன்று. இவ்வுயிர் வாழ்க்கை நாம் மேற்கொண்டதோர் மெய்யான கடமை. அங்காந்த இளிநகையினுலேயே, ஒருவனும் பெருந்தகைமையும் நன்மையு முற்றவனுகமாட்டான். மிகச் சீர்திருந்திய நகைமொழிநிலை யனைத்தும், கூழைப் பதப்படுத்தலையாதல் சிற்றுணவிற்கிடும் இன்மணப்பொருளையாதல் ஒக்கும். கேவலம் தனி மிளகையேனும் மிளகாயையேனும் ஒருவரும் உண்ண மாட்டார். பல்வகை மேன்மைப்பாடுகளைத் தனது மனத்திற்சிறுவனெருவன் நிரப்பிக்கொள்ளட்டும். ஆனால் நகைத்தற்குரியனவற்றை மட்டுமே அவன் கருதவேண்டாம். அல்லது திரித்துரையையும், வழூஉப்பொருளையும், இளிவரற்புனைவையும், வழக்கமாய்ச் சிந்தித்துத் தனது மனக்கண்ணை ஊனமாக்கிக் கொள்ளவேண்டாம். குறுகிய மனமுடையான் ஒருவன் என்பதைத் தோற்றுவிக்கப் பொருள்களின் நகைவிளை பக்கத்தை மாத்திரம் நோக்கும் வழக்கத்தைக் காட்டிலும் மிகத்திருந்திய சான்று ஒன்று மின்றும். என்னேவெனில், நகைவிளை பக்கம் எப்போதும் பொருள்களின் மேற்புறத்திலேயே பதிந்து கிடக்குமென்றூர் அரிஸ்தாதில் ஞானியும். இந்நாட்டில் இற்றை நாளில் மிகமலிந்து கிடக்கும் நகைப்பொருள் வாய்ந்த விநோத நூல்களையும் குணக்குறிப்புக்களையும், நற்பொருளிறுதி நாடகம் போன்று ஏதோவொரு பொழுது போக்கரக மட்டுமே கருதப்படுமேல், அவையிற்றை மேற்கொள்ளலாம். புன்மையும், இழிதகைமையுமுடைய மானுடகுணத்தின் இளிநகைக் குறிப்புக்களை நுனிப்புன் மேய்ச்சலாய் நோக்குதலினும், மிக நுணுகி உணரும் மாணுக்கர்களுக்கு நற்கலைப்பயிற்சி அதனினும் மிக்க நன்மையு மின்பமும் வாய்ந்ததாகின்றது. ஆராய்ச்சி நூலின் கடுமைத் தொழில்களினின்றும் விலகி ஆறுவதற்கு விநோத நூலென்று பெயர்கொண்டவற்றைப் படிப்பதினும் மிகத்தொல்லாசியரின் சிறந்த பழமொழியை ஒழுங்குற்ற செய்யுணடையில் அமைத்தலாதல், மிகப் பயனுடையதோர்வழியில் உழைத்தலாகும். அவ்வாறு விநோத நூலிற் காலம் போக்குதல், வாழ்க்கையிற் செயலற்றிருக்கும் சில வேளைகளில், மிக்க மடிபுகுந்த மனத்தினர்க்கு விசேடமாய் ஏற்பட்டதோர் தொழிலாம்.

ச. கி. சுந்தராசாரியன்.

---

# A BLACK SCORPION.

## ஒரு நண்டுத்தெறுக்கால்.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையின்கணுள்ள உயிர்ப்பொருட் சாலைக்கு உயிருள்ள நண்டுத்தெறுக்கா லொன்று கஞ்சத்தினின்றும் ஆகஸ்டுமீ 15 - ஆந் தேதி போந்தது. அஃது அப்பொழுது சினையாயிருந்தது; ஏறக்குறைய ஒரு சாண் நீளமுள்ள அது 19 - ஆந் தேதி ஈனத் தலைப்பட்டது. அவ்வாறு தலைப்பட்டு மூன்று நான்குமணி நேரத்தினுள் 20 குஞ்சுகள் வெளிப்பட்டன. ஒவ்வொரு குஞ்சும் தன் தாயின் வயிற்றினின்றும் வெளிப்பட்டவுடன் தானாகத் தனது இயற்கையுணர்ச்சிவலி காரணமாகத் தன்னுடைய தாயின் முதுகின்மேலேறிக்கொண்டது. அவ்வாறு அவ்விருபது குஞ்சுகளும் தன் முதுகிலேறிக்கொண்ட பிறகு தாயானது தனது கொடுக்கை வளைத்து நிறுத்தி அவற்றைப் பாதுகாத்துக்கொண்டது. தாய் கருந்தேளாயினும் குஞ்சுகள் வெண்ணிற முள்ளனவாயிருந்தன. தாயின் கழுத்திற்குச் சிறிது கீழேயுள்ளதோர் புழைவழியாகக் குஞ்சுகள் வெளிப்பட்டன. ஆகவே தாய்த் தெறுக்காலின் முதுகுவெடித்து அதன் குஞ்சுகள் வெளிப்படுகின்றனவென்ற சாமானியக் கொள்கை தவறுடைத்தாகின்றது. தாய் தனது குஞ்சுகளைப் பாதுகாத்தலிற் காட்டுங் கவலை யாவருங் கண்டு வியக்கத்தக்கது. சானறியக் குஞ்சுகளினருகே ஒரு சிறு துரும்பையெடுத்துப் போகடினும், தாய் வெகுண்டு கொடுக்கினாற்கொட்ட முயலுகின்றது. தாய்க்குத் தெரியாமற் குஞ்சுகளைத் தொடலாம்.

இனி அத்தெறுக்காலினிடத்தில் 22 - ஆந் தேதி மாலை சில சோதனைகள் செய்து பார்த்தோம். முதற்கண் அதன் குஞ்சுகளுள் ஒன்றைக் கலாசாலை உயிர்நூற் புலவர் கொன்று அத்தாயின் முன்னர் வைத்தனர். அப்படி வைத்தவுடனே அது தனது இறந்த அக்குஞ்சை யெடுத்துத் தின்றுவிட்டது. பிறகு பிறிதொரு குஞ்சைக் கான்முறித்துத் தாயின் முன்னர் இட்டனர். அதன்மேல் அத்தாய் தனது குஞ்சுகளுளொன்று காலொடிந்துபோனமையால், தன் முதுகிலேறிக் கொள்ளமாட்டாது தவிப்பது கண்டு உடனே தனது கரங்களையும் கால்களையும் நீட்டி அதற்குப் பலவிதத்தினும் உதவிசெய்து பார்த்தது. அவ்வாறு செய்து பார்த்தும் அக்குஞ்சு தன் தாயின் முதுகின் மீது ஏறிக்கொள்ளும் வலியிலதாயிற்று. அஃதுணர்ந்த அதன்தாய் அக்குஞ்சின்மேல் உடனே பாய்ந்து அதனைக்கொன்று தின்றுவிட்டது. இவ்வாறு அத்தாய்த் தெறுக்கால் சிறிதேனும் அன்பின்றிச் செய்தமைக்குக் காரணமென்னை? தன் குஞ்சு நகர்தலின்றி வாளா வருந்தியுழன்று துன்புறுவதினும் அது சாதலே நலமென்று கருதிற்றோ? அற்றேல் அது தன் குஞ்சினைக்கொன்ற மட்டில் நில்லாது அதனைத் தின்னவும் புகுவானேன்? நம் உயிர்நூற் புலவர் செய்த சோதனையிலும் இறந்த தன்

குஞ்சைத் தாய் தின்று விட்டதே! ஆதலின் இதன் மெய்க்காரணம் பிறிதொன்றாய்த்தா னிருக்கவேண்டும். அஃதென்னை? நந்தம உயிர்நூற் புலவர் பினவருங் காரணங் கூறுவாராயினர் :—அத்தாய்த் தெறுக்காலானது அவ்வாறு தின்னாது தன்னுடைய இறந்த குஞ்சையும் தற்காத்துக்கொள்ள முடியாத குஞ்சையும் அஃதஃதிருந்த இடத்திலேயே கிடக்கும்படி விட்டுவிடுமாயின், தேள்களுக்கும் தெறுக்கால்களுக்கும் பகையாகிய பிறஜந்துக்கள் அக்குஞ்சுகளையுந் தின்றுவிட்டுத் தேள்தெறுக்கால்களின் குஞ்சுகள் எங்கேனும் காணப்பட்டால் அவ்விடத்திற்குச் சமீபத்திலேயே அவற்றின் தாயும் உடன் பிறந்த மற்றைக் குஞ்சுகளும் இருக்குமென்பது திண்ணமாதலின் அக்குஞ்சுகள் வந்த வழியாகத் தாமுஞ்சென்று மற்றைக் குஞ்சுகளும் அவற்றின் தாயும் இருக்குமிடம் அறிந்துகொண்டு அவை சோர்ந்திருக்கும் அற்றம் பார்த்து அவையனைத்தையுங் கொன்று தின்னப் புகுதலியலும். ஆதலின் தன் பகையாய ஜந்துக்களினின்றுந் தானுந் தன் மற்றைய குஞ்சுகளும் தப்பிப்பிழைக்கக் கருதியே அத்தாய்த் தெறுக்கால் அங்ஙனஞ் செய்ததென்க. அஃறிணைப் பொருள்களிடத்தும் இவ்வியல்பு என்னே! பலவற்றின் நலங்கருதி யொன்றனைக் கோறலு மென்னே! தான் கொல்லாவிடினும் தன் பகையாகிய பிறிதொன்றனாற் கொலலப்படு மென்றே? தற்காக்கும் வன்மை யற்றது தரணியில் வாழுதல் தகாதோ? என்னே! இயற்கை யொழுங்கு! என்னே! இறைவன் படைப்பு மகிமை! அவனருட் செயல்களின் காரணங்கள் அவனருளாற் புலப்பட்டா லன்றி அவை பிறிது வழியால் நமக்குப் புலப்படுதலு முண்டோ? இவ்வாறு கடவுளருளால் நம் ஆங்கிலவாணர் பலவகைப்பட்ட பொருள்களின் பெற்றிகளையும் உய்த்துணர்ந்து வெளியிடும் நூல்கள் அனைத்தையுங் கூட்டுண்ணுதல் என்றுகொலோ? அம்மேற்புல விஞ்ஞானிகளைப்போல நாமும் உழைத்துப் பொருளியல் உணரவேண்டாவோ? தமிழ் வல்லீர்! எழுமின்! எழுமின்!!.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்.

---

## AN ADAPTATION OF ADDISON'S VISION OF MIRZA.

## மரீசி கண்ட பாவனைக் காட்சி.

**கலிநிலைத்துறை.**

1. பாண்டி நாட்டினிற் பல்வளம் பழுநிய பழனிச்
சேண்ட டாவிய சிகரியி னொருபுடை செறிந்த
மாண்ட தொல்குடி மறையவர் சேரியின் மதிநூற்
காண்ட லோங்கிய மரீசிநற் பெயரிய கற்றோன்.

2. நண்பர் சூழுற வதிதரு நாளொரு நண்ப
னெண்ப ரந்தவவ் விருங்கலைக் கிழவனை யேத்திக்
கண்ப டாதநீ கண்டதோர் காட்சியை யெமக்குப்
பண்பி னுனுரை செய்யெனப் பனவனும் பகர்வான்.

3. ஐய யான்சொலு மதனைநும் மஞ்செவித் தேக்கி
மெய்யை யோர்ந்தில கியல்பினை விரும்புதி ரொருகான்
மையு லாஞ்சிகை மலைமிசை யிவர்ந்துள மகிழ்ந்து
பைய யானத னெழில்வளம் பார்த்தினி திருந்தேன்.

4. கந்த நாறுபைங் காந்தளங் கரந்தரும் பொடிகொண்
மந்த மாருதஞ் சூலுடை மடந்தைபோல் வயங்க
நந்த மாநுட நடலைசேர் வாழ்வினை நாடிச்
சிந்தை செய்தனென் றிறனுறப் பற்பல நினைத்தான்.

5. இறுதி யிற்றுணிந் தேயிவ ணிசைதரு மனிதன்
வறிது நீடுமோர் சாயையா மாநுட வாழ்வுஞ்
சிறிது முண்மையில் லாதவொர் கனவென்த் தெளிந்துள்
ளுறுதி யுற்றனெ னுவகையு மற்றனெ னுளத்தே.

6. அன்ன சாலையி லண்மையி னம்மலை முடிமேற்
பன்னு மாவினம் புரக்குங்கோ பாலனை நிகர்த்துத்
துன்னு வேய்ங்குழ லொருகையிற் றுதையத்தன் மேற்கார்
மன்னு கம்பலம் வயங்கமுன் வந்தவற் கண்டேன்.

7. இனையன் யாவனென் றெண்ணுறு மெல்லையி லெதிர்நின்
றனையன் றன்மலர் வாயிடை யமுதினை யுகுத்த
வினையை யொப்பத்தன் வேய்ங்குழ லிசைத்தனன் வெதிரின்
சினையுந் தீங்குரல் சேர்த்திய செய்கையு மென்னே.

8. மாணு மம்மலர் வாயினின் றெழுகிய மதுவோ
யாணர் வண்டின மமையிடை யீட்டுமின் னறையோ
பூண ராப்புனை புங்கவன் சாமமோ பொருந்தும்
வேணு கானத்தி னியல்பினை விள்ளவு மெவனே?

9. திருந்து நல்லற மிம்பரிற் செவ்விதின் மகிழ்ந்து
புரிந்த புண்ணியப் புகழுளா ரும்பரிற் புகுத
வருந்து மந்தத்தின் மனமுறு மயர்வினை யொழிப்பான்
முருந்து மூரலா ரரம்பையர் முரலிசை யமுதோ?

10. பரிதி மாறனிப் பாசுரம் பயிலுமின் னிசையோ
சுருதி நாரதன் றும்புரு சொரியும்வான் சுவையோ
விருது கூறிய வேமனை வென்றசா தாரிக்
கருது பண்ணிசை யோவிவன் காட்டிய கீதம்?

11. கன்னி பாகன்றன் கழலிணை கருதுபு களித்த
மன்னு சீர்த்தியா னாயன்றன் மகிழிசை மடுக்கு
நன்ன ராவின மெனமுகி ழுரண னிசைகேட்
டுன்னி யேங்குகோ வியரென வுருகினே னுள்ளம்.

12. இன்று காறும்யா னறிகிலா வின்னிசைத் தேக்கி
யன்று யாழிசை யான்மகி ழசுணமா வென்னத்
துன்றி னேனவண் சொலற்கரி தாயபே ரின்ப
மன்ற வென்மனத் தடைதந்தென் வயமிலே னின்றேன்.

13. இம்ம லைத்தலை யிடையொரு சித்தனேய் தருமென்
றம்ம முன்பல முதியர்வா யறிந்துளே னெனினும்
விம்மு வேய்ங்குழல் வியனெழு கிசையுடன் வெளிவந்
தெம்ம னோரெதி ரியையுமென் பதையுண ரேன்யான்.

14. இன்ன வாறிவ னின்னிசை யேற்றுள மிரவி
முன்ன மாவிபோ லுருகியம் முன்னவ னிடத்துத்
துன்னு மன்பினத் தூயவன் மொழிசெவித் தோய
வென்ன கத்தினில் வேட்டினி திருந்தனெ னிப்பால்.

15. நேய மோடுதன் னிசையினை நிறுத்தியந் நிமலன்
சேய நிற்குமென் றன்முகஞ் செவ்விதி னோக்கிச்
சேய நன்மரை முகமகிழ் சிறந்துதன் கரத்தா
னாயி னேனையு மழைத்தன னண்ணினே னவன்முன்.

16 என்றன் கண்ணிணை யென்னுநல் லெழிற்சகோ ரங்க
ணன்று தேக்கப்புன் னகைநில வொழுக்குநற் றவத்தோன்
மன்ற னாறிய மலரடி வணங்கினேன் மகிழ்ச்சி
மன்ற நீடிய மனத்தினால் வாயுரை மறந்தேன்.

17. ஒப்பி லாவழி வொளிவிடுத் துயர்மனக் கமலந்
திப்பி யஞ்செறி மணத்துடன் சிறந்திவண் மலர
விப்பு விக்கணோ ரிதயத்தி னிருளினை யொழிக்கும்
வெப்ப நீத்தவா னிரவியா ரியனென வியந்தேன்.

18 பணிந்த வென்றனைப் பரிவொடும் பங்கயக் கரத்தா
லணைந்தெ டுத்தென தகங்களி யடைதர வன்பு
திணிந்த நோக்கொடச் சித்தன்றன் வாய்மலர் திறந்து
குணந்தி ருந்திய மரீசிநின் கொள்கையைக் குணித்தேன்.

19. தனிமை யாயிவட் சார்ந்துநீ மனத்துடன் சாற்று
மினிமை யாந்தனி மொழியினை யென்செவி யேற்றேன்
மனம கிழ்ச்சியோ டென்னுடன் வருதியென் றிசைத்தா
னுனிகொ ளூசியின் வழிச்செலு நூலெனத் தொடர்ந்தேன்.

20. எளிய னேனையு மிகழ்ந்திடா தெடுத்தரு ளியவெம்
மளிகொ ளும்பெரு மானட லாறுமா முகத்தோன்
களிகொண் டாடுமிக் காமர்சீர் மலையுயர் முடிமேற்
றெளிவு சேர்மதிச் சித்தனென் றனைக்கொடு சென்றான்.

21. ஆங்குச் சென்றபி னருந்தவ னன்புடன் விளித்துப்
பாங்கிற் கீட்டிசைப் பார்க்குக வுரையெனப் பகர்ந்தான்
பாங்கர் நீடிய பைம்புல மிசையலை பாயும்
வீங்கு வெள்ளமு மீதொரு பாலமும் விளங்கும்.

22. இன்ன யாவென விசைத்தலு மிசைவலோன் கூறு
மன்னு மிப்புல மிருவினை மருவிய துன்ப
மென்னு பைம்புல மினையவா ரியுமினைத் தெறியு
நன்ன ரூழியின் பிரிவென நாடுதி நண்பா!

23. என்ற வன்மொழி யேற்றுளம் வியந்தனெ னீண்டுத்
துன்றும் வெண்டிரை வெள்ளமோர் முகில்வழித் தோன்றிக்
குன்றி மற்றுமோர் கொண்டல்வாய்க் குறைதர வோடி
யொன்று மாறெவ னுரைத்தியெற் குத்தம வென்றேன்.

24. சித்த னென்மொழி சிந்தையிற் கொண்டிவை தெரிப்பா
னத்து மன்பநீ காண்பது ஞாயிறென் னூழி
வைத்த ளந்திடு காலமா மூழியின் வகையா
மித்த ராதலத் தோற்றமூ டிறுதிகா றியங்கும்.

25. இருபு றத்தினு மெறிலியின் மயங்கிய வினைய
திரைபு ரண்டொலி கடலினைச் செவ்விதி னாய்ந்து
விரவு மாறதன் மீதிவண் விளங்குக யாவென்
றுரைசெய் வாயென வுரைத்தன னெண்டவச் சித்தன்.

26. பரவை வாயொரு பாலங்கண் டேனெனப் பகர்ந்தேன்
மருவு மன்னது மானுட வாழ்வென மதிப்பாய்
திருவு வாயதைத் தினைவிழி யாலெனச் சொற்றான்
பொருவி லாதவப் புண்ணியத் தவம்பல புரிந்தோன்.

27. உற்று நோக்கவவ் வுவரிவா யோங்கிய பால
முற்று நின்றகண் மூவிரு பஃதுட னொருபான்
பெற்றுப் பற்பல பின்னமாங் கண்களும் பெருக
நிற்ற லானொருங் கமைவன நூறென நினைந்தேன்.

28. இன்ன வண்ணம்யா னிவைதமை யெண்ணுறு மெல்லை
முன்ன மீதெழின் முற்றிய வாயிர முழைவாய்
மன்னி நின்றதிவ் வாரியின் பெருக்கினின் மறைந்து
பின்ன மாயதோர் பிரளயத் தென்றனன் பெரியோன்.

29. இனைய பாலத்தி னின்னும்யா வுளவென விசைத்தி
டெனவு ரைத்தன னிருந்தவ னதன்மிசை யீண்டி
யினிதி னெண்ணில்பன் மாந்தர்க ளியங்கலு மிருள்சேர்
கனமி ரண்டதன் கடைகளிற் செறிதலுங் கண்டேன்.

30. என்று கூறிப்பின் பினையபா லத்தினை யின்னு
நன்று நோக்கலு நடப்பவர் சமிற்பலர் நழீஇக்கீழ்
மன்ற வோடுறும் வாரிவாய் வீழ்தலைக் கண்டு
தன்று மின்னதன் சூழ்ச்சியு மியாதெனச் சூழ்ந்தேன்.

31. அறைந்த பாலத்தி னடியினி லளவிலாப் பொறிகண்
மறைந்தி ருப்பவை மாந்தர்தங் கால்பட வல்லை
திறந்து போகமீச் செறிபவர் திடீரெனச் சிதைந்து
நிறைந்த வெள்ளத்தி னாழ்ந்துயிர் நீத்தலைக் கண்டேன்.

32. இன்ன தன்மைசேர் படுகுழி பற்பல வீண்டித்
துன்னிப் பாலத்தின் றொடக்கத்துந் துறுமுமப் பரிசான்
மன்னு மாந்தர்கள் பற்பலர் மங்குல்வாய்த் தோன்று
முன்ன ரக்குழி வாய்விழுந் தொழிந்தனர் மொழியின்.

(இன்னும் வரும்.)

ந. பலராம ஐயர்.

---

# KANT'S CONCEPTION OF SPACE.
# இடவுணர்ச்சி.

## 1. * மானத விளக்கம்.

**நா**ம் அனைவரும் புறப்பொருள்கள் எல்லாம் நமக்கு வெளியிடத்திலே உள்ளனவென்றும், அவற்றுள் ஒவ்வொன்றும் மற்றையவற்றைப் போலவே யாதானும் ஓர் **இடத்தில்** இருக்கின்றதென்றும் அறிந்திருக்கிறோம். இவ்வாறு இவையிருக்கும் **இடத்திலே** தான் அவ்வவற்றின் உருவமும், அளவும், அவை தம்முள் ஒன்றற்கொன்றுள்ள நிலைமையும் நமக்கு வெளியாகின்றன. நாம் இங்ஙனம் **இடத்திற்றான்** இவ்வொவ்வொன்றையுங் காணக்கூடும். நம்மைப்பற்றியே நமக்கு உணர்ச்சி உண்டாகும்போது, அஃதாவது நம் நிலைமை நமக்குத் தெரியும்போது, நாம் ஆன்மாவை நேரே ஒரு புறப்பொருளைக் காணுதல் போலக் காண்கின்றோமல்லோம். ஆயினும் இத்தகைய உணர்ச்சி யொன்றனாற்றான் நம் நிலையே நாம்உறுதிபெறக் காணத்தக்கதோர் விஷயமாகின்றது. ஆகையால் நம் அகத்தே நிகழ்வன என நிச்சயிக்கப்

* மானதம் = Metaphysical.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

படுவன எல்லாம் ஒன்றற்கொன்று **கால** சம்பந்தமுடையனவாகத் தோற்றுகின்றன. நாம் எப்படி **இடம்** நமக்குள்ளே இருப்பதன்றென்று அறிவோமோ அப்படியே **காலம்** நமக்கு வெளியே இருப்பதன்றென்றும் அறிகிறோம். அங்ஙனமாயின் **இடம், காலம்** என்பன யா? அவை உள்ளவாறே உண்மைப் பொருள்களா? அவை எண்ணத்தின்பாற் படுவனவேயோ? அல்லாக்காற் பொருள்களுக்குள் அமைந்துள இயைபுகள் தாமோ? அவை இன்னணம் நாம் பொருள்களைக்காணாவிடினும் அப்பொருள்களிடத்திலேயே உள்ளனவேயோ? இஃதன்றிக் **காலமு மிடமும்** நமக்குப் பொருட்புலனாகுந்தோறும் இன்றியமையா திருப்பனவாமன்றி வேறெவையும் அல்லவோ? காலமு மிடமும் இன்னணம் நம் மனவமைதியின்பாற் பட்டனவேயன்றி மனத்திற்குப் பிறிதாய வேறெவற்றிற்கும் காலமு மிடமும் உள்ளன எனல் சாலுமா சாலாதா? இவைகளுக்குத் தக்க விடைதருதற்காக இடத்தைப்பற்றி ஒரு மானத விளக்கம் செய்யத் தொடங்குவாம். இடமென்னும் எண்ணத்தில் இன்னது உள்ளது என்பதைப்பற்றி விவரமானதாகாவிடினும் விளக்கமானதொரு விஷயத்தைச் சொல்லுகின்றமையால் அதனை **விளக்கம்** என்போம்; இவ்விளக்கம் இடம் காரண உணர்ச்சி யென்றற்கு நமக்குள்ள காரணங்களை எடுத்துரைத்தலின் **மானத**மாம்.

(1) இடமானது புறப் பொருள்களை நாம் காண்பதனால் அக்காட்சிகளினின்றும் நம்மால் ஊகிக்கப்படுவதொரு அநுபவம்பற்றிய எண்ணம் அன்று. ஏனெனில் எனக்குப் புலப்படுவனவான சில காட்சிகள் தம்முள் வேற்றுமைப் படுவன என்பதையும் அவை வெவ்வேறு **இடத்தி**லுள்ளன என்பதையும் யான் அறிந்திருந்தாலொழிய, அவை யெனக்குப் புறமான ஒன்றற்கு, அஃதாவது யானிருக்கும் இடமல்லாத வேறோர் இடத்திலுள்ள தொன்றற்குச் சம்பந்தமுடையன என்பது எனக்குத் தெரியாது. அஃதன்றியும் அவை தம் அமைப்பில் வேறுபட்டு வெவ்வேறு இடங்களில் உள என்ற உணர்ச்சியிலேனெனில் அவை ஒன்றன் புறத்தொன்றாயும் ஒன்றன் பக்கத்தொன்றாயும் உள்ளன என்பதும் எனக்குத் தெரியாது. ஆகையால் **இடம்** என்னும் உணர்ச்சி நாம் நமக்குப்புறத்தேயுள்ளனவற்றைக் காணுந்தோறும் இன்றியமையாது நிகழுவதென்பது போதரும். நாம் காணும் பொருள்களுள் ஒன்றற் கொன்றுள்ள புறவியைபுகளின் அநுபவம் யாதொன்றும் நமக்கு **இடம்** என்னும் எண்ணம் உண்டாவதற்குக் காரணமாகாது; இடமெனும் உணர்ச்சி முன்னரே இருந்தாலன்றி நமக்குப் புறப்பொருளநுபவமே இலதாமாதலின்.

(2) இடமானது புறப்பொருளுணர்ச்சி எல்லாவற்றிலும் நம்மால் முன்னரே அறியப் பெற்றதோர் இன்றியமையாத காரணவுணர்ச்சியாம். இடத்தில் ஒரு பொருளு மில்லாதிருப்பதாக நாம் மிக எளிதில் எண்ணலா

மெனினும், என்ன முயற்சி செய்தாலும் இடம் நீங்கிவிட்டதாக எண்ணல் இயலாது. ஆதலின் இடமானது காட்சிக்கு இன்றியமையாததொரு தன்மையாம். அஃது அக்காட்சியைச் சார்ந்ததோர் * தீர்ந்த எண்ணமன்று. ஆகையால் அது காரணம் பற்றியதாம்; புறப்பொருட் காட்சியிலெல்லாம் ஆவசியகமாய் நம்மால் முன்னரே எண்ணப்பட்டதாம்.

(3) இடமானது பொருள்களுக்குள்ள இயைபுகளின் நியாயங்காட்டக்கூடியதும் அல்லது பொதுவானதுமான மனோபாவனையன்று; அது கலப்பில்லாத புலப்பாடாம். யாங்ஙனமெனில் நமக்கு ஒரே இடத்தைப் பற்றித்தான் உணர்ச்சியுண்டு. நாம் அநேக இடங்கள் உள்ளன போலப் பேசுதல் உண்மையே. ஆயினும் நாம் உள்ளவாறே எண்ணுவது அவை தனித்தனி ஒரே மாறுபாடில்லாத இடத்தின் பாகங்களென்பதேயாம். இஃதன்றியும், இப்பாகங்களெல்லாம் ஒரே வியாபகமான இடம் எனப்படுவதன் முன்னரே இருப்பன என்றேனும், இவை யொன்றாய்ச் சேர்ந்துதான் அந்த முழுமையான இடம் உண்டாகிற தென்றேனும் சொல்லலாகாது. ஆனால் இவற்றை அதன் கண்ணேயே உள்ள பாகங்களாகவே எண்ணக்கூடும். இடம் என்பது ஒன்றே ஒன்று தான். நாம் ‘இடம் பல’ என்போமானால் இந்த ஓர் இடம் அநேகவிதமாய்க் குறிக்கப்படலாமாதலின் ‘இடம் பல’ என்னும் நம்பொதுஎண்ணம் இத்தகைய குறிப்புக்களையே முன்னரே ஆதாரமாகக் கொண்டுளது என்பதே நமது உட்கருத்து. ஆதலால் இடம் என்னும் அத்தனியெண்ணத்துக்கு ஆதாரமாயுள்ளது காரணவுணர்ச்சியே யன்றி அநுபவ வுணர்ச்சியன்று. ஆதலால் ஒரு முக்கோணத்தின் இரண்டு பக்கங்கள் மூன்றாம் பக்கத்தினும் பெரியன என்னும் க்ஷேத்திரகணித உண்மை கோடு, முக்கோணம் என்பனவற்றின் பொது எண்ணத்தினின்றும் ஒருபொழுதும் உண்டாகாது. அது காரணவுணர்ச்சியினாற்றான் உண்டாகும். இவ்வுணர்ச்சியி லிருந்தென்றால் அதைக் காரணமுறைப்படியும் நியாயவழிக்குரிய உறுதியுடனும் ஊகிக்கலாகும்.

(4) இடமானது நமது உணர்ச்சிக்கு அளவற்றதொன்றாகக் காணப்படுகின்றது. அநுபவத்தாலறியப்பட்ட ஒவ்வோ ரெண்ணத்தினும் அவ்வெண்ணத்தின் கீழ் அடங்கிய கணக்கிறந்திருக்கக்கூடிய பொருள்களுக்கெல்லாம் பொதுவாக ஒரு பண்பைப்பற்றி நாம் உண்மையில் நினைக்கிறோம். ஆனால் அநுபவவுணர்ச்சியின் இயல்பினாலேயே அது தனக்குள் கணக்கிறந்த * தீர்ந்த எண்ணங்களை உடையதென எண்ணுதல் முடியாதாம். ஆனால் இடமெனிலோ இன்னணமே அதன் பாகங்களெல்லாம் கணக்கிறந்தனவாய் ஒரே காலத்தில் அதனிடத்திலிருப்பனவாக எண்ணப்படுகின்றது. எனவே இடத்தைப்பற்றிய முதன்மையான உணர்ச்சி காரண உணர்ச்சியே யன்றி அநுபவத்தாலாய எண்ணம் அன்றாம்.

* தீர்ந்த எண்ணம் = Determination.

## 2. * மனோதீத விளக்கம்.

மனோதீத விளக்கமானது எப்படி ஒரு விதியினின்று மற்றும் காரண முறையான † தொகையறிவு விளக்கப்படலாமென்பதைக் காட்டத் தலைப் படுகின்றது. அது பயனடைதற்கு (1) இப்பொழுது நாம் விசாரிக்கும் விதி யினின்று பெறத்தக்க தொகையான உண்மைகள் உள்ளவாறே யிருக்கின் றன என்பதையும் (2) அவ்விதிக்குக் குறித்ததொரு பொருள் கொண்டாலே அவை அன்னணம் பெறப்படும் என்பதையும் நிரூபித்தல் வேண்டும்.

க்ஷேத்திர கணிதமானது இடத்தின் குணங்களைத் தொகையாயும் அதே காலத்திற் காரணவகையானும் நிச்சயிக்கின்றதொரு நூலாம். இடத்தைப் பற்றி இத்தகைய அறிவு உண்டாகக் கூடுமானால் அஃது எத்தன்மைத்தா யிருத்தல் வேண்டும்? அதைப்பற்றிய நம்முதலுணர்ச்சி மனத்துக்கே யுரிய தோர் உணர்ச்சியாய்த்தான் இருத்தல்வேண்டும்; ஏனெனில் க்ஷேத்திர கணித உண்மைகளின் உண்மைபோன்ற புதிய உண்மை யாதொன்றும், ஒரு குறித்த எண்ணத்தின் ஆராய்ச்சியினின்றும் அடையப்படாதாம். இம் மன வுணர்ச்சியோ காரணவகையினதாதல் வேண்டும். அஃதாவது அது நாம் ஒரு புறப்பொருளை நேரிற் காணுதற்கு முன்னரே நம்மிடத்திருந்திருத்தல் வேண்டும்; ஆகையால் அது கலப்பற்ற தனியுணர்ச்சியே யன்றி அநுபவ வுணர்ச்சியன்றாம். என்னையெனின், இடம் மூவகை யளவினதேயா மென் றாற்போன்ற க்ஷேத்திர கணித உண்மையெல்லாம் நிரூபண நிச்சய முடை யனவாம்; அஃதாவது, நம்முணர்ச்சிக்கு ஆவசியகமெனத் தோற்றுவன வாம்; இப்படிப்பட்ட உண்மைகள் அநுபவம் பற்றினவையல்ல; அநுப வம் பற்றிய உண்மைகளினின்று ஊகிக்கப்படுவனவுமல்ல. அப்படியானால், பொருள்களுக்கு முன்னரே அவற்றின் புறவுணர்ச்சி நம் மனத்தில் எப்படி யிருத்தல் கூடும்? அப்பொருள்களைப் பற்றிய எண்ணம் அம்மனத்திற்காரண வகையால் எப்படி அநுமானிக்கப்படும்? தெளிவாகவே, இவ்வுணர்ச்சி நம் மிடத்திலேயே இருத்தல் வேண்டும்; அஃதாவது நம்முடைய மனவமைதி யைச் சேர்ந்ததாய்த்தான் இருத்தல் வேண்டும்; இதனால் இம்மனவமைதி பொருள்களினால் அவற்றை நேராய் அறியும்படி அல்லது உணரும்படி வலியுறுத்தப் படுகின்றது; ஆகையால் உணர்ச்சி புறக்காட்சிகளுக்கெல்லாம் இன்றியமையாத ‡ சர்வவியாபக வடிவாகவே இருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

ஆகையால் நம்முடைய இவ்விளக்கம் ஒன்றுதான், க்ஷேத்திரகணிதம் காரணவகையானதும் தொகுதியானதுமான ஒருவகை அறிவுநூலாயிருக்க லாமென்பதைத் தெளிவாக்குகின்றது. மற்றைய விளக்கங்கள் இங்ஙனஞ்

* மனோதீதம்=Transcendental.
† தொகையறிவு=Synthetic Knowledge.
‡ சர்வ வியாபக வடிவு=Universal form.

செய்யப் பிழை படுகின்றன. அவை புறத்தில் நம் விளக்கம் போன்று இருப்பனவேனும் இக்கூறிய பிரமாணத்தினால் அதனினின்றும் எளிதிற் பகுத்தறியப்படலாம்.

### * துணிபுகள்.

i. இடமானது ஒருவாற்றானும் பொருள்களுக்கே யுரியதோர் பண்பன்று; அன்றிப் பொருள்களுக்கே, அவை தாமே தத்தமக்குடையதோர் இயைபுமன்று. அது புறப் பொருளுணர்ச்சியில் நம் இயற்கைத் தன்மைகளை அறவே நீக்கினும் அப்பொழுதும் அப்பொருள்களைச் சார்ந்துள்ளதோர் தீர்ந்த எண்ணம் அன்று. ஏனென்றால், நாம் பொருள்களைக் கண்டுணர்தற்கு முன்னரே, அவைகள் ஒவ்வொன்றையும் சார்ந்தேனும், அல்லது அவைகள் ஒன்றற்கொன்றுடைய இயைபினைச் சார்ந்தேனும் உள்ள, யாதானும் ஒரு தீர்ந்த எண்ணத்தைக் காரண வகையாற் காணல் ஒரு போதும் இயலாது.

ii. இடமானது புறத்தே புலனாகும் காட்சிகள் அனைத்தூக்கு முரிய † வடிவே யன்றி வேறொன்று மன்று. அது நமக்குப் புறவுணர்ச்சி உண்டாவதற்கு இன்றியமையாத ‡ அறிநிலையாம். நம்முடைய ஏற்குந் தன்மை, அல்லது பொருள்களால் வலியுறுத்தப் படுந்தன்மை, நமக்குப் பொருளைப் பற்றி யாதானுமோருணர்ச்சி யுண்டாவதன் முன்னரேயே ஆவசியகமாய் இருக்கிறது. ஆதலின், ஒரு பொருளை நேரிற்காணுதற்கு முன்னமேயே எல்லாக்காட்சிகளின்வடிவும் நம்மனத்தில் எப்படிக் காரணவகையால் இருத்தலியலு மென்பதையும், மேலும் இவ்வடிவு எல்லாப்பொருள்களையும் அறியவேண்டியதோர் கலப்பற்ற தனி உணர்ச்சியாகிப், பொருள்களை அநுபவத்திற் கண்டால் அப்பொழுது அறியப்படுகிற அவைகளுக்குள்ள இயைபுகளை, அவ்வநுபவத்திற்கு முன்னரேயே நிச்சயிக்கின்றனவான விதிகளை எப்படித் தன்னிடத் தடக்கியுள்ள தென்பதையும் எளிதில் அறியலாகும்.

ஆகையால், நம் மானுட இயற்கையை மாத்திரம் கொண்டுதான் நாம் இடம், இடங்கொள்ளும் பொருள் முதலானவற்றைப் பற்றிப் பேசலாகும். புறப்பொருளுணர்ச்சி யெல்லாவற்றிற்கும் இன்றியமையாத - அல்லது பொருள்களால் வலியுறுத்தப்படுகிற - நமக்கேயுரிய தன்மைகள் நீங்கி விட்டனவாகக் கருதினால் **இடம்** என்னும எண்ணம் யாதொரு பொருளுமில்லாததாய்ப் போய்விடும். பொருள்கள் நம் உணர்ச்சிக்கு எட்டினமட்டுமேயன்றி இடவளவை யுள்ளனவாகக் கூறமுடியாது. 'புலப்பாடு' என்று நாம் சொல்லுகிற இந்த ஏற்குந் தன்மையின் மாறுபாடில்லாத வடிவு பொருள்கள் நமக்குப் புறத்தே யுள்ளனவாக நாம் உணரும் இயைபுகளுக் கெல்லாம் ஆவசியகமான நிலைமையாம்; இந்த வடிவு பொருள்களினிட

* துணிபுகள் = Inferences.
† வடிவு = Form.
‡ அறிநிலை = Subjective condition.

மிருந்து நீங்கினதாகக் கருதப்படுமாயின் அது தான் **இடம்** என்னும் பெயரால் அறியப்படுகிற கலப்பில்லாத தனியுணர்ச்சியாம். நம்முடைய காட்சிக்கு உரியவான தன்மைகளைப் பொருள்கள் இருத்தற்கே காரணமான நிலைமைகளென்று சொல்லலாகாது. அத்தன்மைகள் பொருள்கள் நமக்குப் புலப்படுகின்ற மட்டிலேயே அப்பொருள்களுக்கு உரியனவாம். ஆதலால், **இடம்** நமக்குப் புறமாகத் தோன்றக்கூடிய பொருள்கள் எல்லாவற்றையும் வியாபித்திருக்கின்றது எனச்சொல்லுதல் நேரிதாமாக, அவற்றை எவ்வகைப் பிராணி நோக்கினும், அல்லது அவை காணப்படினும் காணப்படாவிடினும், அவை தம்மிற்றும் உள்ளவாறே அவற்றை இடம் வியாபித்திருக்கின்றது எனச் சொல்லுதல் பொருந்தாதாம். என்னையெனின், நாமொழிந்த மற்றும் மனவுணர்வுள்ள உயிர்களுக்கும், பொருளுணர்ச்சியில் நமக்கு எங்கும் உள வாகத் தோன்றும் நிலைமைகளே யுள்ளனவென்று தீர்மானித்தற்கு நமக்கு யாதொரு வழியுமில்லை. ஒரு தீர்மானம் ஒரு பிராணிக்கு உரியதாகும் வரையறைகளை இன்ன என்று குறிப்பிப்போமாயின், அத்தீர்மானம் அதன் பின்னர் ஒரு வரையறையுமின்றி உண்மையாம். எல்லாப் பொருள்களும் ஒன்றன்பக்கத் தொன்றாய் **இடத்தில்** இருக்கின்றன என்னும் உண்மை நாம் நமக்கேயுரிய காட்சியுணர்ச்சியைப் பற்றியே பேசுகிறோம் என்னும் வரையறையுடனேயே உண்மையுடையதாகும். ஆனாற் புறக்காட்சிகளாய் எல்லாப்பொருள்களும் ஒன்றன்பக்கத் தொன்றாக இடத்தில் இருக்கின்றன என்று சொல்லி நம் உண்மையின விஷயத்தை இதைவிட நன்றாய்க் குறிப்பிப்போமாயின், அஃது எவ்விடத்தும் யாதொரு விலக்குமின்றி யுண்மையுடையதாகும். ஆதலின் நமது விளக்கம் நாம் எப்பொருளைப் புறத்தே காணலாகுமோ அப்பொருளுக்கே உரியதோர் தீர்ந்த எண்ணமாக இடத்தின் உண்மைநிலையை—அஃதாவது, பொருள்பற்றிய உண்மையை - நிறுவுகின்றது. பொருள்கள் உள்ளவாறே-அதாவது, நமக்குரிய பொருளுணர்ச்சி அமைதி நீங்கலாகவே-அவ்வப்பொருளுக்குத் தக்கபடி இடமானது உள்ளது என்று அறிவினால் எண்ணப்படின், அது * **கருத்துநிலையாய்** விடுமேயன்றிப் பிறிதன்றாம் என்பதும் அதே காலத்தில் ஏற்படுகின்றது. ஆதலால் நம்மாற் காணக்கூடிய எல்லாப் புற அநுபவங்களையும் குறிக்கும்பொழுது இடம் **அநுபவவுண்மை** உடையதென்பதை நாம் வற்புறுத்துகின்றோம்; ஆனால் அதன் மனோதீதக் கருத்து நிலையையும் நிறுவுகின்றோம்; அதாவது, அதனையே வேற்றுச்சொற்களாற் கூறப்புகின், இடம் நமக்குக் கூடுமான அநுபவங்களுக்கேயுரிய வரையறைகளை யுடையதென மதியாது, பொருள்கள் உள்ளவாறே அவற்றிற்கு உரியதோர் ஆவசியகத்தன்மையென எண்ணுவோமானால் இடமானது யாதொன்றுமன்று என்னுங் கொள்கையைக்கொள்ளுகின்றோம்.

வ. சு. சண்முகம் பிள்ளை.

---

* கருத்துநிலை = Ideality.

# MAHAVELLIPORE.

## மகாபலிபுரம்.

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த இதற்கு ஏழுகோயிற்பட்டணம் என்ற வேறு பெயருமுண்டு. இது சதுரங்கப்பட்டணத்துக்கும் கோவளத்துக்கும் மத்தியிலுள்ளது. நம்மவர்கள் ஆயிரக்கணக்காய் யாத்திரை செய்யும் புண்ணிய ஸ்தலங்களுள் இதுவும் ஒன்று. இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்குங் கோயிலால் நம்முடைய முன்னோர்கள் கல்வெட்டுத் தொழிலில் எவ்வளவு கைதேர்ந்திருந்தனர்களென்பது நன்கு விளங்கும். இக்கோயிலைக் கண்ணுறுவா ரெவரும் ஆச்சரியமடையாதிரார். கண்டவர் மனத்தைக் கவரும் இக்கோயில் சமுத்திரக்கரையோரத்திற் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் பார்ப்பவர்க்கு ஐந்து பிரிவாகத்தோற்றும். இவைகளில் ஒன்று தனித்தும, ஏனையநான்கும் ஒரு கூட்டமாகவுங் காணப்படுகின்றன. கூட்டமாயுள்ள நான்கும் தெற்கு வடக்காக ஒரு வரிசையிலிருக்கின்றன. அன்றியும் இவை நான்கும் ஒரே பாறையினின்றும் வெட்டப்பட்டன போலவுங் காணப்படுகின்றன. அப்படியிருக்கும் பக்ஷத்தில், இக்கற்பாறையானது தென்பாகத்திற் சுமார் 40 அடி உயரமும் வடபாகத்தில் 20 அடி உயரமும் இருந்திருத்தல்வேண்டும். வடகோடியிலுள்ள கோயில் 16 அடி உயரமும் 11 சதுரடிப் பரப்பும் உள்ளது. இக்கோயில் ஒன்றுதான் வேலை பூர்த்தியானதாகக் காணப்படுகின்றது. ஆனால் இதன் உட்புறத்தில் விக்கிரகமொன்றும் வைக்கப்பட்டிருக்கக் காணோம். ஆகையால் இதனை எதற்காகக் கருதினர்களென்பதையும் நாம் சரியாய் ஊகித்தறியக் கூடவில்லை. தென்பாகத்தில் உள்ள இதற்கடுத்த கோயிலும் இதைப் போலவே உள்ளது. இது 16 அடி நீளமும் 11 அடி அகலமும் 20 அடி உயரமும் உள்ளது. இதற்கடுத்தது மூன்றுவது கோயில். இதுவே மிகவும் விசித்திரமானது. இது 42 அடி நீளமும், 25 அடி அகலமும் 25 அடி உயரமும் உள்ளது. இதன் தலைப்புறம் வில்வளைவாகத் தோண்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் வெளிப்புறம் முழுவதும் வேலை பூர்த்தியாயிருக்கிறது; உட்புறத்திற் கொஞ்சத்தூரம் மட்டில் வேலைசெய்து மற்றது குறையாகவிடப்பட்டுள்ளது. ஏதோ அபாயம் நேர்ந்து வேலையை நிறுத்தி விட்டதாகக் காணப்படுகிறது. மேன்மாடத்தில் ஒரு பெரியவெடிப்பு விட்டிருக்கிறது ; அதனுல் உட்புறத்தில் நல்ல வெளிச்சமுண்டு. மேலேயிருந்து அநேகம் சிறுபாறைகள் இடிந்து தரையில் விழுந்து கிடப்பதை அவ்வெளிச்சத்தில் நாம் நன்றாய்க்காணலாம். இவ்வெடிப்பு நிகழ்ந்ததற்குப் பலபேர் பல்வேறு விதமாய்க் காரணங்கூறுகின்றனர். பூகம்பத்தால் நிகழ்ந்திருக்கலா மென்பது அநேகருடைய அபிப்பிராயம். ஆனால் அந்த இடத்தை நாம் கவனித்துப் பார்த்தால் அவ்வெடிப்பு நிகழ்ந்ததற்குக்

காரணம் அவ்விடத்தில் வேலை செய்தவர்களுடைய திறமைக் குறைவா யிருக்கலா மென்பது தோற்றுகிறது. வெளிப்புறம் முழுவதும் வேலை செய்து விட்டுப் பின்பு உட்புறம் தோண்டப் புகுந்திருப்பார்கள். தம்மு டைய கைத்தொழில் திறமையால் கோயில் தோண்டியதாக வின்றிக் கட் டப்பட்டதாகவே பார்ப்பவர்களுக்குச் சிறப்புடன் தோற்றுவிக்குமாறு தூண் முதலியனவும் நிறுத்தி வேலை செய்து வந்திருப்பார்கள். ஆனால் அங்ஙனம் செய்தவர்கள் கற்கூரையின் பளுவுக்குத்தக்க பெரிய தூண்களாக நிறுத்தாமற் சாதாரண வீடுகளில் மரக்கூரைகளுக்கு நிறுத்துவதுபோன்ற மெல்லிய தூண்களாகவே செதுக்கியிருக்கிறார்கள். இவ்வேலை மட்டிற் பூர்த்தியாயிருக்கும் பக்ஷத்தில், எப்போதாவது மேற் கூரை முழுவதும் திடீரென்று ஏககாலத்தில் இடிந்து விழுந்து கீழ்க்கட்டிடத்தையும் அதி லுள்ளவர்களையும் பொடிப் பொடியாக்கி விட்டிருக்கக்கூடும். ஆனால் அங் ஙனமின்றி வேலை குறையாயிருக்கும் போதே, வெடிப்பு விட்டபடியால், இதன் குறிப்பை அவர்கள் தெரிந்துகொண்டு மேலே வேலை செய்வது அபாயத்துக்கிட மென்றெண்ணி அதனுடன் வேலையை நிறுத்தி விட்டிருப் பார்கள். நான்காவது கோயில் 27 அடி நீளமும் 25 அடி அகலமும் 34 அடி உயரமும் உள்ளது. இதன் தலைப்புறம் முழுவதும் அநேகம் சித்தி ரங்களுடன் வேலை செய்யப்பட்டுப் பூர்த்தியாயிருக்கிறது. ஆனால் அடிப் புறம் அப்போது தான் வேலை துவக்கி நிறுத்தி விட்டிருக்கிறார்கள். முற் கூறிய கோயிலுக்கு நேர்ந்த ஆபத்துக்குப் பயந்தோ அல்லது வேறு எக் காரணத்துக்கோ அறியக்கூடவில்லை. இவைகளெல்லாம் ஆறுவது நூற்று ண்டிற் செய்யப்பட்டி ருக்கவேண்டுமென்றும், இவைகள் பௌத்தருடை ய கோயில்களைப் போலவே காணப்படுகின்றன வென்றும் இக்காலத்துச் சரித்திர வித்வான்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

கடலோரத்தில் தனியாயுள்ள கோயிலானது சமுத்திரத்தின் அலைகள் அதன்மேல் வந்து மோதும்படி யமைக்கப்பட்டிருப்பதனாற் பார்ப்பதற்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. இது பூர்வீக திராவிடர்களுடைய கோயில் மாதிரியாகவே கட்டப்பட்டுள்ளது ; ஆகையால் இதற்குக்கோபுர வாசற்படியில் விசேஷமாக வேலை செய்யப்படாமல் மூலஸ்தானத்துக்கு மேலே பெரியவிமானமொன்று கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் பரப்பு சுமார் 1600 - அடியும் விமானத்தின் உயரம் 60-அடியும் இருக்கலாம். இதன் சிகரத்தில் உயர்ந்த கல்லிற் செதுக்கப்பட்ட ஒரு கலசம் நிறுத்தப் பட்டுள்ளது. இக்கலசம் எவ்விதக் கேடுமடையாமல் இப்போதும் பொலி வுடன் விளங்குகின்றது. கீழ்ப்புறத்திலிருந்த கோபுரவாசற்படிக்கும் மூல ஸ்தானத்துக்கும் இடையே யிருந்த வழியை அடைத்து விட்டபடியால் இவையிரண்டும் வெவ்வேறு கோயில்களாகக் காணப்படுகின்றன. இங்ஙனம் அவ்வழியை அடைத்திருக்கக் கூடுமென்பதற்கு வேறு அத்தாட்சிகளுங்

காணப்படுகின்றன. விமானமுள்ள பெரிய கோயிலுக்கு நேரியவழியொன்றுமில்லை. சிறுகற்பாறைகளின் பேரில் ஏறி அங்கிருந்து உள்ளே செல்ல வேண்டியிருக்கிறது. கோபுரவாயிலென்று கருதப்படும் சிறிய கோயிலுக்குத் தரையிலேயே பெரியவழியொன்று தென்புறத்திலிருக்கிறது. சாதாரணமாக எல்லாக்கோயில்களிலும் உள்ளபடியே அவ்விடத்திலும் தீபஸ்தம்பம் ஒன்று இருக்கிறது. ஆனால் அஃது இருக்குமிடத்தை நாடுவதற்கு வழியொன்றையுங்காணோம். ஸ்தம்பத்தின் முனையில் ஒரு முளைவைக்கப்பட்டுளது. கோயிலுக்குச் சமீபத்திற் சிறிய இடபங்களின் உருவங்களும் ஒரு மகேசுரன் உருவமும் கல்லில் வெட்டப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் இவைகளெல்லாம் உப்பங்காற்றுப்பட்டு உருமாறிக் கிடக்கின்றன. மூலஸ்தானத்தில், மிகவுமுயர்ந்த கருங்கல்லினால் 16 பக்கங்களுடன் செதுக்கப்பட்ட லிங்கமொன்று வைக்கப்பட்டுளது. இதற்குப் பின் புறமாக உள்ள தாழ்வாரத்தில், சேஷசயனத்தில் விஷ்ணு பள்ளிகொள்ளும் விதமாக உருவம் வைக்கப்பட்டுளது. ஒரே கூரையின் கீழ் இவ்விரு விக்கிரகங்களும் எங்ஙனம் வைக்கப்பட்டனவோ காரணம் அறியக்கூடவில்லை. ஒரு வேளை சைவம் வைணவ மென்னு மிரு மதத்தினருக்கும் வேறு பாடு தோன்றிய காலத்துக்கு முன்னரேயே அவ்விக்கிரகங்கள் ஸ்தாபிக்கப்பட்டனபோலும். இக்கூற்றுக்கு அனுசரணையாகச் சுவர்களிற் பார்வதி, பரமேசுவரன், சுப்பிரமணியர் உருவங்களோடு பிரமவிஷ்ணுக்களின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

கற்பாறையின் இடப் பக்கத்திலேதான் அர்ச்சுனன் தவம் புரிந்ததாய்ச் சொல்லுகின்றார்கள். பாறையின் இடப் பாகத்தின் மேற் புறத்தில் மகாபலிச் சக்கிரவர்த்தியினுடைய பெரிய உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. சக்கிரவர்த்தியினுடைய சமீபத்தில் ஐந்து அரசர்களும் அவர்கள் மனைவிகளும், நான்கு யுத்தவீரர்களும், ஐந்து சந்நியாசிகளும் ஒரு மகர்ஷியும் விளங்குகின்றார்கள். சிங்கம், புலி, சிறுத்தை, கலைமான் முதலிய மிருகங்கள் அச்சித்திரங்களில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அப்பாறையின் கீழ்ப்புறத்தில் ஒரு குரு தமது ஐந்து மாணவர்களுடனும் ஒரு மகர்ஷியுடனும் உட்கார்ந்திருக்கின்றார். இந்தக்குரு புத்தரா யிருக்கலாமென்றெண்ணுதற் கிடமுண்டு. அந்த மாணவரில் மூவருடைய தலைகளுடைந்து போயிருக்கின்றன. அப்பாறையின் மத்தியபாகத்தில் வாசுகியின் வாலும் உடலின் அடிப்பாகமும் காணப்படுகின்றன. இதற்குக் கீழே நாகராஜனது குமாரத்தி உலூபியினுடைய உருவம் காணப்படுகிறது. நாகராஜனது மேற்பாதி உடல் உடைந்துவிட்டதாயும் அவ்விடத்திற் பூமியிற் புதைக்கப்பட்டிருப்பதாயும் செவியுற்ற ஓர் ஆங்கில கனவான் அதனைத் தோண்டியெடுக்கச்செய்து உடைந்து போனவிடத்தில் அதைப் பொருந்தி அவ்வுருவம் முழுவதுக்கும் ஒரு

புகைப்படம் பிடித்தார். அதிற் கையிரண்டும் தலைமேற் கூப்பிய ஒரு மனித னுருவமும், தலை நிமிர்ந்து நின்ற ஓர் எழுதலை நாகமும் இன்னும் புத்தமதத் தைச்சார்ந்த பலகுறிகளும் காணப்பட்டன. இவற்றிற்கு வலப்புறத்தில் தத்தம் மனைவியுடன் கூடிய பல அரசர்களும் மனிதர்களும் கருடர்களென்று சொல்லப்படும் பக்ஷிகளுடன் கூடிய மனிதர்களும் அநேக வானரங்களும் காணப்படுகின்றன. இவ்விடத்தில் ஒரு பூனை தவஞ்செய்கின்றது; இதற் கருகிற் பல எலிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இன்னும், யானை, சிங்கம், கரடி, கோழி, வாத்து முதலியவைகளுங் காணப்படுகின்றன. ஆனால் இந் தப்பாகங்களெல்லாம் காடு அடர்ந்து மரங்களாலும் முட்களாலும் சூழப் பட்டு மறைந்து கிடந்தன. மேலேகூறிய புகைப்படமெடுத்த ஒருவாரங் கழித்துச் சென்னைத் தேசாதிபதியாயிருந்த நேபியர் பிரபுவவர்கள் அவ்வி டம் சென்று பூமியில் ஏழெட்டடி ஆழம் தோண்டிப் பரிசோதிக்கச் செய்த னர். உடைந்துபோன உருவங்கள் அநேகங் காணப்பட்டன. பெரிய யானையின் உடைந்துபோன துதிக்கையுங் காணப்பட்டது. புத்த குருவின் இடப் பாகத்தில் ஒருகலைமான் தலை குனிந்து தனது மூக்கைக் காலாற் சொரிந்து நின்றதைக் கண்டவர்களனைவரும் உயிருள்ள மானென்றே மயங் கினார்கள். யானை புலி முதலிய மிருகங்கள் ஒரு புறத்தில் உயிருள்ளவை போன்றே விளங்குவதும், புத்தகுருவும் அவர் மாணாக்கர்களும் இப்புறத் தில் தோன்றுவதும் நாகராஜனும் அவன் குமாரியும் பின்புறத்திற்காணப் படுவதும் பார்ப்பவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றன. இவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக் கூடிய முக்கியமான விஷயமிது வொன்று: மனிதர் தத்தம் மனைவியுடன் செல்வதும், கொடிய மிருகங்கள் இடைக்கிடையில் வசிப்பதும் இவர்களுடன் அநேகர் புடைசூழ மகாபலிச் சக்கிரவர்த்தி செல்வதும் ஆகிய இக்காட்சிகள், அக்காலத்திற் பௌத்தமத மானது நல்லெண்ணம், பொறை, ஜீவதயை என்னுமிக் கொள்கைகளைப் பெற்றிருந்த தென்பதையும் மதஸ்தாபனமானது மிகவுஞ் சமாதானத்துட னேயே செய்யப்பட்ட தென்பதையும் ஒருவாறு தெற்றெனத் தெரிக்கின் றன.

சேய்யூர் - முத்தைய முதலியார்.

---

## விநோதக் கூற்றுக்கள்.

### 1. தும்மல் சிறையிலடைத்தது.

ஒரு சிறைச்சாலையில் வேடிக்கை பார்க்க வந்தவர் "நீ யேனடா சிறை யிலிருக்கிறாய்?" என்று ஆங்குள்ள ஒருவனைப் பார்த்துக்கேட்டார். அதற் கவன் " தும்மினேன், ஐயா" என்றான்.

"என்ன? நீ தும்மினதற்கா உன்னைச் சிறையி லடைத்தார்கள்?" என்று அவர் மீட்டுங் கேட்டார். அதற்கவன் "ஆம், ஐயா, நான் நடுநிசியில் ஒரு பிரபுவின் வீட்டிற் சென்று தும்மினேன், அப்பிரபுவும் விழித்துக் கொண்டு என்னை உடனே பிடித்துக் கொண்டார்" என்றான்.

## 2. மூடர்களின் பெயரேடு.

ஓர் அரசனிடத்திற் சில வியாபாரிகள் சென்று அநேக உயர்ந்த அழகான குதிரைகளைக் காட்டினார்கள். அரசனும் அவைகளை மெய்ச்சி வாங்கினான். ஓர் இலட்சம் ரூபாயையும் கொடுத்து இன்னும் உயர்ந்த குதிரைகள் கொண்டு வரும்படி அனுப்பினான். இஃது இப்படியிருக்க ஒரு நாள் அரசன் சிரித்து விளையாடுஞ் சமயத்தில் தனது முதன் மந்திரியை நோக்கித் தன் இராஜ்ஜியத்தில் உள்ள மூடர்களின் பெயரை யெல்லாம் எழுதிக் கணக்கிடும்படி கட்டளையிட்டான். மந்திரியும் அப்படியே செய்து, எல்லாருடைய பெயர்களுக்கும் முதலில் அரசனது பெயரை எழுதி அரசனிடங் கொடுத்தான். அரசன் சினந்து "ஏன் அப்படிச்செய்தாய்?" என்று கேட்டான். "ஏனென்றால் முன் பின் முகமறியாதவரும் இனித்திரும்பி வாராதவருமான வியாபாரிகளிடம் இலக்ஷ ரூபாயைக் கொடுத்தனுப்பிவிட்டீர்களே!"

"ஆ, அப்படியா? அவர்கள் குதிரைகளுடன் திரும்பி வருவார்களென்றன்றோ நினைத்தேன்?"

"அப்படி அவர்கள் திரும்பிவந்தால் தங்கள் பெயரை அழித்துவிட்டு அவர்கள் பெயரை எழுதுவேன்."

## 3. மகாராஜாவை என்னோடு பேசவைத்தேன்.

"இன்றைத்தினம் மகாராஜா என்னோடு பேசினார்" என்று ஒருவன் மற்றொருவனோடுரைத்தான்.

மற்றவன்மிகவும்ஆச்சரியப்பட்டு"உன்னோடா மகாராஜா பேசவந்தார்? என்ன பேசினார்? அடே! உனக்குச் சுக்கிர தசை யடிக்கிறதடா!" என்றான்.

"நான் கோட்டை வாசல் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தேன். மகாராஜா அவர்கள் குதிரைவண்டியிலே வந்தார். நான் ஒதுங்காமல் நின்றேன். இராஜாவுக்கு முன்னே வந்துகொண்டிருந்த ஒருவருக்கும் நான் நகரவேயில்லை. பிறகு மகாராஜா அவர்களே என்னைப்பார்த்து "அடே! ஆரடா நீ? விலகி நில்; நீ ஏன் இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டார்."

க. தே. வேங்கட வரதாசாரியன்.

# REVIEWS OF BOOKS.

# புத்தகக்குறிப்புக்கள்.

## மில்லர் சரித்திரம்.

[இது தாம்ஸன் கம்பெனியார் பதிப்பித்தது; 10 அணு, 12 அணு, 1 ரூபா என மூவகை விலை யேற்பட்டுளது; தபாற்கூலி வேறு.]

இது சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியின் முதலுபாத்தியாயராகிய மில்லர் துரையின் சரித்திரத்தைக் கூறுவது. இதனை இயற்றினோர் அக்கல்லூரி உபாத்தியாயர்களுள் ஒருவராகிய இராசரத்தினம் பிள்ளையவர்கள். மில்லர் துரையவர்கள் இத்தென்னிந்தியாவிற்செய்த நன்மைகள் பல; இங்குள்ள மாணவர் நயத்திற்காகவே அவர் தம் வாழ்நாண் முழுதையும் ஒப்பித்து விட்ட அரிய செய்கையும் மிகவும் வியக்கற்பாலது. இவைகளைத் துரையவர்கள்பாற் கல்வி பயின்றோரும் அவரால் நன்மையடைந்தோரும் மற்றோரும் மறவாதிருத்தற்காக அவரது குண நலங்களையும் செயனலங்களையும் எடுத்து இன்புற வெழுதி நிலவச்செய்வது ஒரு நன்வினையேயாம். ஆயினும் இச்சரிதத்தை இங்கிலீஷில் எழுதாது தமிழில் எழுதியதற்குத் தக்க காரணம் ஒன்றும் காண்கிலேம்; மில்லர் துரையின் சுவபாஷை இங்கிலீஷ்; அவர் எண்ணுவதும் உரையாடுவதும் எல்லாம் இங்கிலீஷில்; அவர் கற்பித்ததும் அவரிடத்துக் கற்போர் பயின்றதும் இங்கிலீஷ்; ஆகவே அவருடைய சொல்லாற்றல் குணநலம் முதலியவற்றை இங்கிலீஷ்ப் பாஷை தெரிப்பது போல் மற்றொரு பாஷையும் தெரிக்கமாட்டாது; அஃதங்ஙனமாக, தமிழ்ப்பாஷையில் அவர் சரிதத்தை எழுதினது ஒரு பெருங் குறைவேயாம். ஒருபோது இதனை ஆக்கியோன் கொள்கை இத்தகையபேருபகாரியைப்பற்றி இங்கிலீஷ் அறியாதாரும அறிதல் வேண்டும் என்பது போலும். அதுபோக, இப்புத்தகத்தில் நம்மை மனங்களிக்கச் செய்வதொன்றுண்டு. அஃதென்னவெனில், இராசரத்தினம் பிள்ளை தாம் கிறிஸ்தவராயிருந்தும் தாமெழுதும் சரிதம் கிறிஸ்தவ போதக ரொருவரின் சரிதமாக விருந்தும் மேற்கோள்களும் நீதி வசனமும் எடுத்துக் காட்டவேண்டிய விடங்களில் விவிலிய புஸ்தகம் முதலிய கிறிஸ்தவ நூல்களிலிருந் தெடுத்துக் காட்டாது சைவவைணவ நூல்களில் இருந்தெடுத்துக் காட்டியிருக்கின்றமையே. இது தமிழ்நூல்கள் மாணவர்களுக்கு நீதிபோதிக்கத் தக்கவைகளல்ல வென்று மனத்தெழுந்தவாறு கூறும் ஒருசார்க் கிறிஸ்தவ போதகர்களின் வாயை யடக்க வேற்றது போலும்.

## ஸ்ரீராமாநுஜ சரிதம்.

[இது சென்னைத் தாம்ஸன் கம்பெனியிற் பதிப்பித்தது. விலை அணு 8; தபாற்கூலி வேறு.]

மேற் குறித்த பெயர் வாய்ந்த வசன நூல் ஒன்று எமது பார்வைக்கு வந்தது. இதனை இயற்றியவர் சென்னைச் சர்ச் ஆவ் ஸ்காட்லாண்டு மிஷன் காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, தி. கோ. ஸ்ரீரங்காசாரியர். இந்நூல் எவரும்படித்தற்குரிய இனிய செந்தமிழ் வசன நடையினியன்றுள

6 பாரம் கொண்ட ஒரு சிறுநூல். இது ஸ்ரீ விசிட்டாத்வைத மதப்பிரவர்த்தகராய ஸ்ரீராமாநுஜாசாரியரது சரித மகிமையை எளிதாகவும் தெளிதாகவும் எடுத்தியம்புகின்றது. இதனுட்கூறப்படும் ஸ்ரீராமாநுஜரது கால நிர்ணயமும், விசிஷ்டாத்துவைதக் கோட்பாட்டின் விவரங்களும், சரிதப் போக்கினுள் ஆங்காங்குக் குறிக்கப்படும் சில விசேடப்பொருள்களும், மேற்கோட் செய்யுட்களும், வைகுண்டம் தொண்டைநாடு ஸ்ரீபெரும்பூதூர் இவற்றின் வருணனைகளும் சால்புடையனவாகக் காணப்படுகின்றன. வைணவ சம்பிரதாய நூல்களுள் ஒன்றான குருபரம்பராப்பிரபாவம் என்னும் நூலினுள் ஸ்ரீராமாநுஜரது அவதாராதி வைபவங்கள், பலசுலோகங்களும் பாடல்களும் சம்பிரதாய மொழிகளும் செறிந்த மணிப்பிரவாள வசனநடையில் முன்னோர்களால் எழுதப்பட்டுள்ளன வேனும், அந்நூல் வைஷ்ணவராயினர்க்கேயன்றிப் பிறர்க்கும் ஒப்பப் பயன்படாமையின், யாவர்க்கும் பயனுறத்துவான் கருதி இந்நூலினை இன்றியமையா விடங்களில் அத்தகைய மரபுச்சொற்களைத் தழுவி வேண்டுழி விடயங்களைப் பெருக்கியும், சுருக்கியும், விளக்கியும் நமது நண்பர் இயற்றி வெளியிட்ட செயலை வியக்கின்றேம். இத்தகைய நூல்கள் நம் தமிழ் மொழிக்கண் மிகுதியாகத் தோன்றி வெளிவருதல் அவசியமே. இப்பயனுடைச்செயலிற்கு நம் தமிழ் மொழியாளர் துணைபுரிதலும் அவசியமே. இந்நூலாசிரியரது இம்முயற்சி பயனுறுமாறு வேண்டுவதோடு இவர் இந்நூலின முதற்கட்புத்தக விளம்பரத்திற் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ சங்கர விஜயம் என்னும் நூலினையும் விரைவில் வெளிக்கொணருமாறு விரும்புகின்றேம்.

இது காறும் இந்நூலின் குணங்களைப் பாராட்டி யெடுத்துக் கூறியது போலவே, இந்நூலிலுள்ள குற்றங்குறைகளுள் யாம் கண்டவற்றிற் சிலவற்றை நடுவு நிலைமை குன்றாது இங்குக் காட்டுவதும் எமக்கு ஒரு கடப்பாடாம்.

இந்நூலின் 2-ஆம் பக்கத்தில் (அவதாரிகையில்) "உள்ள நடுக்கடலில் திசைதப்பி யலைபவனுக்குக் காருணிகனான ஒருவன் தோணியை யுதவினாற்போலப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பப்படும் மக்கள் அப்பிறவிக் கடல் கடந்துய்யலாம்படி மீளவுங் கருணைகொண்டு, கிணற்றினுள் வீழ்ந்த குழந்தையை யெடுக்க அதனுள் உடன் குதிக்குந் தாயைப்போல அத்திருமால் தானே, இப்புவியில் இராமகிருஷ்ணாதி யவதாரங்களைச் செய்து" என்ற வாக்கியத்தில் முதலிற்கூறிய உவமையில் தோணியை யுதவினாற்போல என்ற உபமானத்துக்கு ஏற்ற உபமேயம் காணப்படவில்லை; வேதம் முதலிய சாஸ்திரங்களை வெளியிட்டளித்து என்று உபமேயங் கூறினாற் பொருந்தும். பிரதானமான அவ்வுபமேயத்தை உய்த்துணரவைப்பது தெளிவன்று. 6 - ஆம் பக்கத்தில் தொண்டைநாட்டு வருணனையிற் "பொய்கை பூதம் பேய் மழிசையர்கோன் முதலிய ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்றதுமான இத்தொண்டை நாட்டினுள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் பன்னிருவருள் இங்குக் குறித்த நால்வர் தவிர மற்றை யெண்மரிற் குலசேகராழ்வார் சேர நாட்டிலும், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் என்ற மூவரும் சோழநாட்டிலும், மற்றை நால்வரும் பாண்டி நாட்டிலும் பிறந்தவராதலால், 'முதலிய ஆழ்வார்கள்' என்றது பொருள்படாது வெற்றெனத்தொடுத்தலாம்.

இராமாநுசன் ஆளவந்தாரது குறைகளை நீக்கிய விவரத்தை முன்பு கூறி அதன்பின் 'ஸ்ரீ ஆளவந்தார் மிகவுங் கடாக்ஷித்ததும், அவரது விரல்கள் நிமிர்ந்ததும் உங்கள் மனதில் தோன்றவில்லையோ' என்ற விஷயத்தை யெழுதினால், படிப்பவர்க்கு விஷயம் இனிது புலப்படும். அங்ஙனமின்றி முன் பின்னாக மாறுபட, பிந்தின செய்தியை 21-ஆம் பக்கத்திலும் முந்தின செய்தியை 34-ஆம் பக்கத்திலுங் காட்டியது உசித மன்று. ஆளவந்தாருக்கு மூன்று குறைகளிருந்தனவென்றும், அவை இன்னவை யென்றும், அவற்றை இராமாநுசன் தீர்க்க உடன்பட்டனனென்றும், 34, 35-ஆம் பக்கங்களிற் குறித்துள்ளார். அக்குறைகள் இன்னின்னவகையால்தீர்க்கப்பட்டன வென்பதைப்பின்பு தெளிவாக விளக்கவில்லை. 48-ஆம் பக்கத்தில் ஒரு விஷயத்தை யெடுத்துக்கூறி அதன் முடிவில் 'இதனாலன்றோ ஆளவந்தாரது குறைகள் யாவும் நீங்கின' என்றெழுதியுளார். ஒரு செய்தியாற் குறைகள் யாவும் எங்ஙனம் நீங்கின? அங்ஙனம் நீங்கினவென்றாலும், பின்பு 57-ஆம் பக்கத்தின் முதலில் வேறொரு விஷயத்தை யெடுத்துக்கூறி 'அதனாலன்றே நம் யமுனைத் துறைவரது மற்றைக் குறைகளும் நீங்கின' என்றும் எழுதுகிறார். முன்னமே குறைகள் யாவும் நீங்கினவெனின், இங்கு மீண்டும் மற்றைக் குறைகளும் நீங்கின என்றல் எங்ஙனம் சாலும்? இங்கும் ஒரு செய்தியாற் குறைகள் நீங்கினவே என்றல் பொருத்தமோ? மற்றொரு செயலால் மற்றொரு குறை நீங்கினதை இன்னதென்று குறிப்பிடவேயில்லை. இராமாநுஜ சரிதத்தில் முக்கியமான இவ்விஷயத்தை ஒழுங்காக எழுதியிருந்தால் உபயோகமாயிருக்கும்.

வைகுண்டமொழிந்த அனைத்துலகங்களையும் லீலாவிபூதி யென்பதே வைணவ சம்பிரதாயம்; அதற்குமாறாக 29-ஆம் பக்கத்து அடிக்குறிப்பில் 'லீலாவிபூதி [இப்பூலோகம்]' என்றது மரபுவழுவாம்.

உடையவரது பஞ்ச ஆசாரியருள் ஒருவர் பெயரைத் 'திருமாலையாண்டான்'என்று வழங்குதலே மரபு. "திருமாலை யாண்டான் திருக்கோட்டி நம்பி திருவரங்கப், பெருமா ளரையர் திருமலை நம்பி பெரியநம்பி, யருமால் கழல்சேரெதிராசர்" என்று திவ்விய கவி-பிள்ளைப் பெருமாளையங்காரும், மற்றும் இவ்வாறேபிற ஆசிரியர்களும் கூறியிருக்கிறார்கள். அங்ஙனமிருக்க, இந்நூலில் அப்பெயரைத் 'திருமலையாண்டான்' என்று விகாரப்படுத்தித் தங் குறி வழக்க மிக வெடுத்துரைத்தலாக நூல் முழுவதும் வருமிடந்தோறும் அங்ஙனமே குறித்துள்ளார். இது சம்பிரதாயத்துக்கு மாறாம். அன்றியும், பொருளடக்கத்தில் மாத்திரம் 'திருமாலையாண்டான்' என்று தாமே குறித்திருத்தல் மாறுகொளக் கூறலுமாகிறது.

32-ஆம் பக்கத்தில் "பாததுளிகள்....வேண்டுவதன்றோ" என்ற முடியும், 92-ஆம் பக்கத்தில் (அநுபந்தத்தில்) இளையாழ்வாரை நோக்கி அவர் தாயார் கூறிய வாக்கியத்தில் 'நீ....வாழ்வீராக' என்ற முடிபும் பால்வழுவாம். அன்றியும், இரண்டாவதாகக் காட்டிய வாக்கியத்தில் மகனைத்தாய் 'வாழ்வீராக' என்றலும் இயல்வதன்று. 67-ஆம் பக்கத்தில் "தந்தையின் பொருளைத் தனயன் பெறுவதுபோலச் சடகோபனருளிய திருவாய்மொழியின் "ஒரு நாயகம்" என்றதிருப்பதிகத்தை அத்திரு நாரணனுக்குச் சமர்ப்பித்து" என்ற விடத்தில் உபமான உபமேயங்கள் இயையவில்லை. 80-ஆம் பக்கத்திற் "கடித்த பாம்பு வலிதாகில் விரசை என்னும் நதியில் மூழ்கி

வைகுண்ட நாதனைச் சேவிக்கும்'' என்ற வாக்கியத்தில் எழுவாய் காணப் படவில்லை; உள்ளபடி பார்த்தாற் 'கடித்த பாம்பு' என்பது எழுவாய்போலத் தோன்றும். அஃது எழுவாயன்று; உரிய எழுவாய் பெய்து எழுதல் வேண்டும்.

உடையவரது அந்திம நிலையில் அவரை அனைவரும் நன்கு ஓம்பிவந்தன ரென்ற விஷயத்தை 86-ஆம் பக்கத்திற் 'செவ்வனே பழுத்திருந்த தேமாங் கனிக்குக் கிளித்திரள்கள் காத்திருக்குமாறு போல அவ்வெம்பெருமானுருடைய திருமேனியைக் காத்திருப்பாராயினர்' என்று விவரித்துள்ளார். இதிற் காட்டிய உவமை விபரீதப்பொருள் பயக்குமாதலாற் சிறவாது. 'தேமாங்கனிக்கு' என்ற நான்காம் வேற்றுமையும் அவ்விபரீதார்த்தத்தை வற்புறுத்தக் கூடியதாதலாலும், உபமேயத்திலுள்ள 'திருமேனியை' என்ற இரண்டாம் வேற்றுமையோடு முரணுதலாலும் அது தகுவதன்று.

பிழை திருத்தத்திற் காணாத பிழைகள் பல இந்நூற் பதிப்பில் எங்கும் பொதுளியுள; அவை பார்ப்பவர்க்கு அருவருப்பைத் தருமாதலால், அவற்றை விலக்குதல் இன்றியமையாதது. முகவுரையின் முதற்பக்கத்திற் 'பழைநடை', நூலிற் பக்கம் 8-இல் 'ஆயுஷ்நாமயோகம்', 10, 20, 53, 85-இல் 'இராமநுசன்', 16-இல் 'காளஸ்தி', 50-இல் 'மாயாவதி', 67-இல் 'கண்வளர்க்கையில்', 71-இல் 'கூரத்ததாழ்வான்', 72 - இல் 'அரணைமேல்', 73-இல் 'வறலாற்றை', 82-இல் 'புதல்வரானப்பட்டர்', 89-இல் அடிக்குறிப்பில் 'உதத்துவஞானம்', 95-இல் 'திருக்குறுகை', இவை முதலியவை முக்கியமானவை. இங்ஙனம் அச்சுப்பிழையாகாத எழுத்துப்பிழைகளும் சில காணப்படுகின்றன; அவை விரதத்தை 'விருத' மென்றும், நாகரிகத்தை 'நாகரீக' மென்றும் எழுதியது போல்வன.

இன்னோரன்னவற்றை யெல்லாம் நம்நண்பர் மறுபதிப்பில் நன்கு திருத்தி ஸ்ரீ ராமாநுஜ சரிதத்தைப் பலர்க்கும் இனிது பயன்படும்படி செய்வாரென நம்புகின்றேம்.

### கோவலவெண்பா.

[இது சென்னை வெ. நா. ஜுபிலி அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. விலை: அணா-4. தபாற்கூலி வேறு.]

இது சங்கநூல்களு ளொன்றாகிய சிலப்பதிகாரத்தின் கதையை யெடுத்துக்கொண்டு செய்யப்பட்டுளது; காப்பியத்தலைவனான கோவலன் பெயரைவைத்துக் 'கோவல வெண்பா' வெனப்பெயரிடப்பட்டுள்ளது; கடவுள் வாழ்த்து முதல் ஆக்கியோன் பெயரீறாக 298-பாடல்கள் கொண்டது. முதனூலாகிய சிலப்பதிகாரத்தைப் போன்றே வழி நூலாகிய இஃதும் புகார் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களாகப் பகுக்கப்பட்டுளது. புகார்காண்டக் கதை முதனூலிற் பெரிதும் விரிந்திருப்ப வழிநூலுடையார் அதனை மிகச்சுருக்கி 60-வெண்பாக்களிற் கூறிவிட்டனர். இங்ஙனங் கூறியதன் காரணம் கல்வியறிவிற்றேரும் இளைஞர் இன்பச்சுவை கற்றலடாதென்ற கொள்கையேபோலும். இரண்டாவதாகிய மதுரைக்காண்டமே ஏனைய பகுதிகளினும் மிக்க சிறப்புடைத்தாக விளங்குகின்றது. இங்ஙனங் கூறியதனால் ஏனைய காண்டங்கள் சிறப்பில

வென்று சொல்ளற்க. இவ்வாறு மதுரைக்காண்டம் மிக்க பொலிவும் மேம்பாடுமெய்தி விளங்குதற்கு அக்காண்டத்தின் கதைச் சுவையும் ஒரு காரணமாதல் யாவரும் அறிவர். நூலினுள் ஆங்காங்கு நீதிகளை யெடுத்துக் காட்டிச் செல்லுமாறு யாவருங் கண்டு போற்றிக் கொள்ளத்தக்கது. மாணாக்கர்களது அறிவு முதிர்ச்சிக்குத் தக்கபடி நூலின் நடையும் அமைந்திருக்கின்றது. இடர்ப்பட்ட சொன்முடிபுகள் பொருண்முடிபுகளின்றிப் பல்வகைப்பட்ட அணி நலங்களும் செறிந்து ஓசையுடைத்தாய் நவின்றோர்க்கினிதாய் யாக்கப்பட்டுள இக்கோவல வெண்பாவினாசிரியர் இராசதானிக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் மா௱௱-ஸ்ரீ பு. மா. ஸ்ரீநிவாசாசாரிய ரவர்கள். இப்புலவர் வசன ரூபமாகச் செய்துள போஜராஜ சரித்திரத்தை நமது சென்னைச் சருவகலா சங்கத்தார் 1903-ஆம் வருஷத்து எவ். ஏ., பரீட்சைக்குப் பாடமாய் ஏற்படுத்தி யிருப்பதுபோல, இந்நூலிற் சில பகுதிகளை அன்னார் ஏதேனும் ஒரு வருஷத்திற் பிரவேச பரீக்ஷைக்குப் பாடமாக நியமிப்பார்களென் றெண்ணுகின்றோம்.

---

# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**மதுரைத் தமிழ்ச்சங்கம்** :—இச்சங்கம் நாளது செப்டெம்பர் மாதம் பதினைந்தாந்தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று மதுரைமா நகரத்து முதன் முறை கூடிற்று. அப்பொழுது பல தேயத்துத் தமிழ்ப்பண்டிதர்களுந் தமிழ்ப் பத்திராதிபர்களும் போந்திருந்தனர். மதுரைமா நகரத்துக் கனவான்களனைவரும் அச்சபையை யலங்கரித்தனர். அச்சமயத்து இராமநாதபுரம் **பாஸ்கரசாமி சேதுபதியவர்கள்** சபாநாயகராக வீற்றிருந்தனர். அற்றை நாட்காலையிற் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய **பாண்டித்துரைத் தேவரவர்களும்** மற்றையோரும் மதுரைச் சொக்கேசராலயஞ் சென்று அருச்சனைகள் செய்து ஆண்டுள்ள சங்கத்தாராலயத்தை யடைந்து அன்னாரை வழிபட்டுப்போந்து அற்றைப் பிற்பகலிற் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' யையும் 'பாண்டியன் புத்தகசாலை' யையுந் திறந்து கல்வியறிவின் பொருட்டு அக்கலாசாலையிற் சேர்ந்து படிக்கப்புகுந்த மாணாக்கர்கட்கு நல்லோரையில் ஆசிரியர்களைக்கொண்டு பாடஞ்சொல்வித்துச் சங்கக் கூட்டத்திற்கு வந்தார்கள். சங்கங்கூடிய அம்மண்டபத்தில் எள்விழற்கிடமில்லாதவாறு ஜனங்களடர்ந்திருந்தனர். இத்தகைய சபையிற் சபாநாயகரவர்களது ஆணையின்படி சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய பாண்டித் துரைத் தேவரவர்களெழுந்து இப்புதிய தமிழ்ச்சங்கத்தின் நோக்கங்களையும் இயல்புகளையும் சங்கத்தின் அவயவிகளாவார் ஒழுகவேண்டிய முறைகளையும்பற்றி யினிது கூறி முடித்தனர். அதன்மேற் கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும் மகாவித்துவானுமாகிய **பிரமஸ்ரீ** சாமிநாத ஐயரவர்களும், முகவைச் சமத்தான வித்துவானாகிய ம-௱-௱-**ஸ்ரீ** இராகவையங்காரவர்களும், சென்னைச் சர்ச் ஆவ் ஸ்காத்லாந்து மிஷன் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய ம-௱-௱ **ஸ்ரீ** சடகோப ராமாநுஜாசாரிய ரவர்களும், சென்னைக் கிறித்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய **பிரமஸ்ரீ** வி. கோ. **சூரியநாராயண சாஸ்திரியாரவர்களும்** முறையே பிரசங்கித்தார்கள்.

அந்தப் பிரசங்கங்களைக்கேட்டு யாவரும் மகிழ்ந்தார்கள். பின்னர்ச் சபா நாயகராகிய சேதுபதியவர்கள் எழுந்து கடன்மடை திறந்தாற்போலப் பிரசங்கமாரி பொழிந்து ஆண்டுப்போந்துள வித்துவான்களனைவரையும்பற்றி வியந்துபேசி அன்னார்க்கும் இத்தமிழ்ச் சங்கத்திற்கும் உள்ள இயைபுகளையினிது விளக்கியதேயன்றிப் பாண்டித்துரைத்தேவரவர்களுக்கும் இப்புதுத் தமிழ்ச்சங்கத்திற்கும் உள்ள பொருத்தத்தினைத் தெளிவுபெறக்காட்டி யாவருங் கரகோஷஞ்செய்து கொண்டாடும்வண்ணந் தமது பிரசங்கத்தை முடித்தனர். அவ்வளவிற் பாண்டித்துரைத் தேவரவர்களெழுந்து சேதுபதியவர்களையும் ஏனையோரையும் பற்றி நன்குமதித்துப்பேசி நின்றனர். யாவருக்கும் வந்தன மளித்தபின் சபை கலைந்தது. சங்கத்தின் பொருட்டுச் சேர்ந்திருக்கும்பணம் ரூ. 50,000 ஆம். இதற்கெனச் சேதுபதியவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ 550 உதவி வருகின்றனர். அஃது ஒவ்வொருமாதமும் நடந்து வருதற்குத் தக்க நிலையான ஏற்பாடுஞ் செய்து விட்டனர்; தமது சமத்தான வித்துவானாகிய இராகவையங்கா ரவர்களையுஞ் சங்கத்திற்குச் செந்தமிழ் என்றதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை நடாத்தும்பொருட்டு அளித்து விட்டனர். இப்பொழுது பாண்டியன் புத்தக சாலையில் உள்ள நூல்களின் தொகை ஆயிரத்திற்கு மேலிருக்கலாம். அதன்கட் பல அருமையான நூல்களின் ஏட்டுப்பிரதிகளும் சேகரித்து வைக்கப்பட்டுள. இப்பொழுது சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையிற் படிக்கும் மாணாக்கர்களின் தொகை 17. அவர்களனைவரும் ஏழைகளாயிருத்தலின் அவர்கட்குச் சங்கத்தாரே அன்னவஸ்திராதிகளும் உதவுகின்றனர். இச்சங்கத்திற்கென ரூ. 5000-க்கு நிலம் வாங்கியிருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இத்தமிழ்ச் சங்கத்திற்குக் கட்டிடமும் நேர்த்தியாக அமைக்கப்படுமென்பது திண்ணம். நிலம் சேதுபதி ஹைஸ்கூலிற்கு அருகேயுள்ளது. இச்சங்கக் கூட்டத்திற்கெனச் சென்ற ஒவ்வொருவருடைய சௌகரியங்களும் நன்கு கவனிக்கப்பட்டன. எல்லா விஷயங்களிலும் இச்சங்கத்தின் முதற்கூட்டமானது சர்வ மங்களகரமாகவும் மகாநந்தகரமாகவும் நடந்தது. இதுபோலவே இனி நிகழக்கடவ கூட்டங்களும் நடக்குமென்பது தேற்றம். இனிச்சங்கத்தின் ஏனைய விஷயங்களையும் இம்முதனாட் கூட்டத்திற் பிரசங்கித்த புலவர்களது பிரசங்கச் சுருக்கங்களையும் பற்றி யடுத்த சஞ்சிகையில் விரித்துக் கூறுவாம்.

**முனிமொழி:**—யாம் இம்மதி 15-ஆந்தேதி கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்குச் சென்றுழி நெல்லையினின்றும் போந்த ம-ா-ா-ஸ்ரீ பால்வண்ண முதலியாரவர்கள் **முனிமொழி** யெனப் பெயர் கொண்டதோர் பழைய செந்தமிழ்ச் செய்யுணூலொன்று அகப்பட்டுளதெனப் பிரமஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய பலவித்வான்கள் முன்னிலையிற்கூறிப் பிரதியையும் விரைவில் அனுப்புவதாகவும் வாக்களித்தனர். அற்றேல் அவ்வையார் அருளிய "தேவர் குறளும்" என்றபாவிற் போந்துள 'முனிமொழியும்' என்ற சொற்றொடர்க்கு 'வியாசசூத்திரங்கள்' எனப் பொருள்கோடலும், 'வாதவூர் முனிவன் சொன்ன' எனப்பொருள் கோடலும் பொருந்தா வென்பது மலையிலக்கன்றே ?

**திராவிட பாஷாசங்கம் :**—இதைப்பற்றி அடிக்கடி நாம் நமது பத்திரிகையில் எழுதி இருக்கின்றோம். எப்பொழுதும் நம்மவர்கள் தாம் தொடங்கும் காரியங்களி லெல்லாம் ஆரம்ப சூரத்துவம் காட்டுவார்களென்பது ஒவ்வொருவரும் அனுபவத்திற் கண்ட விஷயமே. முதற்கண் இச்சங்கம்

காலஞ்சென்ற சேஷாத்திரி யாசாரியரவர்களால் தொடங்கப் பட்டபோது அஃதெவ்வாற்றானும் முன்னுக்கு வந்து யாவரும் விரும்பத்தக்க விதமாக உழைக்குமென்று யாவரும் நம்பியதற்கு விரோதமாக இப்பொழுது அச்சங்கம் வளர்ச்சியின்றிப் பிறந்த நிலையிலேயே இருந்து இருக்குமிடமும் தெரியாது மழுங்கிக்கிடத்தல் யாவரும் பரிதபிக்கத் தக்கதே. இச்சங்கத்தின் காரியதரிசிகளாவார் இச்சங்கத்தினை இன்னும் இவ்வாறே தூங்கிக்கிடக்க விடாது அதனை யெழுப்பி மேன்மேலும் வளரச் செய்வாராக.

**திராவிட வர்த்தமானி** :—இப்பெயர் கொண்டதோர் வாரத்தமிழ்ப் பத்திரிகை நமது சென்னையின்கட் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. அதற்குப் பெருதவிற் பத்திராதிபர் **ரேவரண்டு கெல்லெட் துரையவர்கள் எம். ஏ.** இப்பத்திரிகையிற் சிலசஞ்சிகைகளை யாம் கண்ணுற்ற மட்டில், நேர்த்தியான பளபளப்புள்ள கடிதத்தில் யாவரும் வாசிக்கத்தக்க எளிய தெளிவான தமிழ்நடையிற் பலவகைப்பட்ட விஷயங்களையும் பற்றி விவகரித்து நம் இந்தியர்களாவார் யாவர்க்கும் எவ்வகையிலும் பயன் படத்தக்க விதமாய் அஃது அச்சிடப்பெற்று வெளிப்படுகின்றதென்பது தோன்றுகின்றது. இப்பொழுது வெளிப்பட்டு வரும் இச்சஞ்சிகைகளினுடைய அமைப்புக்குத் தக்கபடியே இனிவரும் சஞ்சிகைகளும் நடந்துவருமாயின் இம்முயற்சி கைகூடிற்றென்பதன் கண் யாதோரையப்பாடு மில்லை.

**புதிய வைஸ்-சான்ஸலர்**:—சென்னைச் சர்வகலாசாலைக்கு வைஸ் சான்ஸலராக நியமிக்கப்படுவோர்க ளெல்லாம் இதுகாறும் இராஜாங்க உத்தியோகம் வகிப்போர்களாகவே இருந்தனர். இப்பொழுது அங்ஙனம் ஏற்பட்ட விதியைப் போலியெனப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டு அவ்வுத்தியோகத்திற்குக் கலைநலஞ் சான்றோ ரெவரேனும் நியமிக்கப்படலா மென்று தாம் மேற்கொண்டதற்கு அறிகுறியாக நமது சென்னைத் தேசாதிபதி யவர்கள் சென்னைக் கிறித்தவகலாசாலைத் தலைவரும் தென்னிந்தியாவின் கல்வி விஷயமாக மிக்க பொருட் செலவு செய்து அன்போடு சென்ற 40 வருஷ காலமாக உழைத்து வருபவருமாகிய **ஆனரபில் ரேவரண்ட வில்லியம் மில்லர் துரையவர்கள், எம். ஏ., எல், எல், டி., டி. டி. டி. எல்., சி. ஐ. இ.,** தக்கவரென்று கருதி அவர்களை அவ்வுத்தியோகத்திற்கு நியமித்திருக்கின்றனர். இதன்கண் நமது தேசாதிபதி யவர்களது செய்கை மிகவும் வியக்கற்பாலது. இதற்காக நாமனைவரும் மகிழ் சிறப்போமாக.

**மாக்கின்லி துரையவர்கள்** :—அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணங்களின் தலைவராகிய மாக்கின்லி துரையவர்கள் துப்பாக்கியாற் சுடப்பட்டு உயிர் துறந்தனர். இம்மகான் உயிர்துறந்தமைப் பொருட்டு யாவரும் துக்கங் கொண்டாடும் வண்ணம் அவர்க்கு மரியாதையாக இம்மதி 19 - ஆந்தேதி வியாழக்கிழமை விடுமுறை நாளாயிற்று. இவ்வளவு புகழ்வாய்ந்த பேருபகாரியின் பொருட்டு யாவருந் துக்கிக்கவேண்டியது அவசியமே.

**ஸர். கே. சேஷாத்திரி ஐயரவர்கள்** :—மைசூர் இராஜ்ஜியத்திற் சென்ற பல்லாண்டுகளாக அமைச்சுத் தொழில்பூண்டு, அரசருங் குடிகளும் ஆங்கிலரும் கொண்டாடி வியக்கும் வண்ணம் இராஜ்ஜியத்தை நடாத்தியதேயன்றி அதற்கு இன்றியமையாதனவாகிய பல்வகைப்பட்ட சீர்திருத்தங்களுஞ் செய்து புகழ்பெற்று விளங்கிய பிரமஸ்ரீ ஸர். கே. சேஷாத்திரி ஐயரவர்கள் சின்னாளின் முன்னர்க் காலஞ்சென்றனர் என்று கேள்வியுற்ற யாவரும் அவர் பொருட்டு இரங்குவாரென்பது திண்ணம்.

---

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY **THOMPSON & CO.,**

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*

அழகப்ப முதலியார். * சிந்தாதிரிப்பேட்டை. *

No. 313—Rs. 2-8-0.

M. PARTHASARATHY NAIDU, MADRAS.

No. 303—Rs. 2-8-0.

V. & T. Rajarathna Mudaliar, Kuppuswami Mudaliar, AGENTS— CALCUTTA PROVIDENT INSTITUTION Coimbatore

No. 314—Rs. 2-8-0.

K. V. SRINIVASA IYENGAR AVL. KUVALAYALY.

No. 309—Rs. 2-0-0.

PATKAPUR NARAIN PRASHAD CAWNPORE

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

No. 300—Rs. 3-0-0.

D. B. ENGINEER'S OFFICE NELLORE.

No. 304—Rs. 3-8-0.

MAN-KOOTTIL CHATHU NAYAR MUCHU-KOONNU, QUILANDY

No. 302—Rs. 2-0-0.

V. N. SHAMA RAO, SONGSTER.

No. 306—Rs. 3-0-0.

PROOF FOR APPROVAL ON SAMPLE PAPER FROM THOMPSON & CO.

No. 308—Rs 3-8-0.

முன்பாகப் பெயரை ரிஜிஸ்தர்செய்யத்தவருதேயுங்கள்

# மினெர்வா டைரிகள்.

அடுத்துவரும் 1902ஹூலத்துக்கு அதி உபயோகமான சிறந்த விஷயங்களடங்கிய மினெர்வா டைரிகள் நாளது நவம்பர்மூ 15உக்குள் விற்பனைக்கு வருமாகையால் அதற்கு முன்பாகப் பெயரை ரிஜிஸ்தர் செய்துகொள்பவர்களுக்கு அடியில்கண்ட குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

| டைரி நம்பர் | விவரம். | அசல் கிரயம். | | | முன்பாக பெயரை ரிஜிஸ்தர் செய்தால். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| 1 | ஐந்துவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3-அங்குல அகலமும் $4\frac{1}{4}$-அங்குல நீளமும் உள்ளது ... .. ... | 0 | 4 | 0 | 0 | 3 | 6 |
| 2 | மடிப்பு உள்ளதும் பென்சல் வைக்கப்பட்டதுமான ஐந்துவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3-அங்குல அகலமும் $4\frac{1}{4}$-அங்குல நீளமும் உள்ளது ... ... ... ... ... | 0 | 6 | 0 | 0 | 5 | 6 |
| 3 | அதிக உபயோகமுள்ளதும் அவசியமுமான விஷயங்களடங்கியதும் 8-அங்குல நீளமும் 5-அங்குல அகலமும் உள்ளது... ... ... ... | 0 | 12 | 0 | 0 | 11 | 0 |
| 4 | டிஷ் டிஷ் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது ... ... | 1 | 0 | 0 | 0 | 15 | 0 |
| 5 | அதிக உபயோகமும் அவசியமுள்ளதுமான விஷயங்களுடையதும் 10-அங்குல நீளமும் 8-அங்குல அகலமுள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது ... ... ... ... ... | 1 | 2 | 0 | 1 | 0 | 0 |
| 6 | பூல்ஸ்காப் கடித அளவில் அச்சிடப்பட்டு கோர்த்தியாய்ப் பயிண்டு செய்யப்பட்டதும் அதிக உபயோகமும் அவசியமுமான விஷயங்கள் அடங்கியதும் 13-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் உள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது... ... ... .. | 1 | 4 | 0 | 1 | 2 | 0 |

மேற்கண்ட டைரிகளில் 1-வது 2-வது நெம்பர் டைரிகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, துலுக்கு, மலையாளம், இந்த ஐந்துவித பாஷைகளில் தேதிகள் அச்சிடப்பட்டிருப்பதோடும் தமிழ்ப் பாஷையில் பஞ்சாங்கமும், 12-மாதத்து ராசி சக்கிரம், க்ரஹபாத சாரம், அமிர்தயோகம், யோகினிநிலை, மகர சங்கராந்தி, ஆலயதரிசனம், ஆபரணம் அணியல், ஆருடத்திற்கு, ஆந்தைக்காதல், உபநயனத்திற்கு, உழவுசெய்ய, எதிர்கொள்ளுதலிவை நன்மை தீமையறியும் பயன், கருட தரிசனம், இராகுகாலம், சரிநாள், காது குத்தும் நாள், கிருகப்பிரவேசம், கோடியுடுத்தல், சீமந்தம், க்ஷௌரம், திக்குத்தம்பல், தேதிமழை, நிஷேக முகூர்த்தம், பயணஞ்செய்யும் தினம், செய்யாத்தினம், பல்லிவிழும் பலன், சௌரி பாஞ்சாங்கம், முதலியவைகளும் அச்சிடப்பட்டிருப்பதனால் இஃது எல்லோருக்கும் சிறந்த உபயோகத்தைக் கொடுக்கும். இதுவரைவெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்ட டைரிகளைக்காட்டிலும் நூதனமும், அதிக விசேஷமுமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றை அடியில் குறிப்பிடுகிறோம். சமாசாரப் பத்திரிகைகள், ஸ்டாம்பு ஆக்ட்டு, கோர்ட்டு பீசு ஆக்ட்டு, இன்கம் டாக்ஸ் டேபில், ஐகோர்ட்டு, கவர்ன்மெண்டு இந்த ஆபீசுகளினுடைய விபரமும், இதரமான பப்ளிக் கோர்ட்டுகளினுடைய விபரமும், 1902, 1903 இந்த வருஷங்களின் காலண்டர்களும், இன்னும் அநேக விஷயங்களும், கவர்ன்மெண்டு ரஜா நாள்களும், இந்து, மகமதியர், கிறிஸ்தவர்கள் முதலியவர்களின் பண்டிகைத் தினங்களும், வருஷாந்தர உற்சவாதிகளும், உலகத்திலுள்ள வர்த்தகசாலைகளைப்பற்றிய விபரங்களும், இதில் எழுத அடங்காத விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்குஎழுதிக்கொள்க:

தாம்ஸன் கம்பெனி, பிராட்வே, சென்னை